பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 13 வியாழக்கிழமை (28.12.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 33

# ஜோர்தான் கப்பலை மீட்பதற்கு புலிகளுடன் நோர்வே தொடர்பு

## முல்லைத்தீவிலிருந்து கொழும்புக்கு கப்பலை கொண்டுசெல்லும் வழிமுறை பற்றி ஆராய்வு

கொழும்பு, டிசம்பர் 28

முல்லைத்தீவில் புலிகளின் கட்டுப்பாட்டுக் கடல் பிரதேசத்தில் தரித்துநிற்கும் ஜோர்தான் நாட்டைச்சேர்ந்த 'பர்ஹா-III' என்ற சரக்குக் கப்பலை அங்கிருந்து பாதுகாப்பாக மீட்பது தொடர்பாக அனுசரணைத் தரப்பான நோர்வே, விடுதலைப் புலிகளுடன் தொடர்புகொண்டு பேச்சு நடத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

திருத்தவேலைகளுக்காக கப்பலை அங்கிருந்து கொழும்புத் துறைமுகத்துக்குக் கட்டி இழுத்து வருவதற்கான ஏற்பாடுகள் குறித்து தற்சமயம் தகவல்கள் பரிமாறப்பட்டு வருகின்றன எனவும் தெரிகின்றது. (08 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் சடலம் மீட்பு!

திருகோணமலை, டிச. 28

திருகோணமலை வரோதய நகர், துவரங்காட்டுப் பகுதியில் நேற்றுமாலை 6 மணியளவில் கைகள்கட்டப்பட்ட நிலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் (08ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழுவின் அலுவலகம் மீது ஆர்.பி.ஜி. தாக்குதல்

அம்பாறை மாவட்டம் 15ஆம் கொலனி பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரவு 9.45 மணியளவில் இனந்தெரியாதோர் மேற்கொண்ட ஆர்.பி.ஜி. தாக்குதலில் அந்த அலுவலகம் முற்றாக அழிக்கப்பட்டதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. இந்தத் தாக்குதல் தொடர்பான மேலதிக விவரங்கள் தெரியவரவில்லை.

## புளொட் அலுவலகம் மீது வவுனியாவில் தாக்குதல்

வவுனியா - பண்டாரிக்குளத்தில் அமைந்துள்ள புளொட் இயக்கத்தின் அலுவலகம் மீது இனந்தெரியாதவர்கள் கைக்குண்டுத் தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனால் சேதங்கள் எவையும் ஏற்படவில்லை என்று கூறப்பட்டது. (த)

## ஜனாதிபதி, அமைச்சர்கள், எம்.பிக்களுக்கு அடுத்தமாதம் முதல் பெருமளவு சம்பள உயர்வு!

கொழும்பு, டிசெ.28

அடுத்தமாதம் தொடக்கம் ஜனாதிபதி, பிரதம மந்திரி, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளங்கள் பல மடங்கு அதிகரிக்கின்றன.

ஜனாதிபதியின் சம்பளத்தை 300 சதவீதத்தாலும் -

அமைச்சர்களின் சம்பளத்தை 210 சதவீதத்தாலும் -

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை 165 சதவீதத்தாலும் - உயர்த்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதேவேளை - அரசாங்க ஊழியர்களின் சம்பளம் 6 சதவீதம் தொடக்கம் 15 சதவீதம் மட்டுமே (வரவு - செலவுத் திட்ட யோசனைக்கு ஏற்ப) அடுத்த மாதம் தொடக்கம் வழங்கப்படவுள்ளது. (08ஆம் பக்கம் பார்க்க)

## பிரணாப் முகர்ஜி ஜனவரியில் வருகின்றார்

கொழும்பு, டிசெ.28

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்காக இந்தியாவின் வெளிவிவகாரத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி விசேட விமானம் மூலம் அடுத்த மாத முற்பகுதியில் கொழும்பு வரவுள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் இந்தியாவில் நடைபெறவுள்ள 'சார்க்' நாடுகளின் தலைவர்களுக்கான மாநாட்டில் கலந்து கொள்வதற்கான (08ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை கடற்படைத் தளத்துக்கு ஜனாதிபதி நேற்று விஜயம்

கொழும்பு, டிச. 28

திருகோணமலை கடற்படைத் தளத்திற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முதல் தடவையாக விஜயம் செய்துள்ளார்.

ஜனாதிபதியின் மகனான ஜோசித ராஜபக்ஷ கடற்படையில் இணைந்து கொண்டபின்னர், அவர் பயிற்சிகளில் ஈடுபடுவதை அங்கு ஜனாதிபதி பார்வையிட்டார்.

இதன்பின்னர் கடற்படை அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடிய ஜனாதிபதி, டிங்கி படகின் மூலம் கடற்படைத் தளத்தைப் பார்வையிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 56 வருட கடற்படை வரலாற்றில் திருகோணமலை கடற்படைத் தளத்திற்கு நாட்டின் ஜனாதிபதி சென்றமை இதுவே முதற்தடவை எனக் கடற்படை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (உ)





திருகோணமலைக்கு நேற்றையதினம் விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கடற்படை அதிகாரிகள் வரவேற்பதையும், ஜனாதிபதி டிங்கிப் படகுமூலம் கடற்படைத் தளத்தைச் சுற்றிப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

### சம்பூரில் அனல் மின்நிலையம் நிறுவும் ஏற்பாடு

## இந்திய மத்திய அமைச்சின் செயலாளர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வருகிறார்

புதுடில்லி, டிசெ.28

திருகோணமலை - சம்பூரில் அனல் மின் நிலையம் அமைக்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக இந்திய மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சரின் செயலாளர் ஆர்.வி. சப்றி, கொழும்பு செல்லவுள்ளார்.

இந்த ஒப்பந்தம் மின்சக்தி, எரிபொருள் துறை அமைச்சின் அலுவலகத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் (08ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா பூங்கா வீதியில் குண்டு; பொலிஸ் உத்தியோகத்தர் மரணம்

வவுனியா, டிச. 28

வவுனியாபூங்காவீதியில் நேற்றுக்காலை 8.35 மணிக்கு நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொல்லப்பட்டார்என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வீதிச்சோதனை நடவடிக்கைகளை மேற்காள்வதற்காக ரோந்து சென்ற பொலிஸாரைக் குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத் (08ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டின் உணவு நிலைமையைக் கையாளும் அரசின் ஒழுங்குகள் திருப்திகரமானவை என்கிறது ஐ.நா.

### ஒரு மாதத்துக்குத் தேவையான மேலதிக பொருள்களை கையிருப்பில் வைத்திருக்க ஏற்பாடு

கொழும்பு, டிசெ.28

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தோன்றியுள்ள உணவு நிலைமையை திருப்திகரமாகக் கையாளக்கூடிய ஆற்றல் இலங்கை அரசாங்கத்துக்கு உண்டு.

ஐக்கிய நாடுகள் சபையின் அவசரகால விநியோகப் பணி சம்பந்தப்பட்ட குழு இவ்வாறு தெரிவித்திருப்பதாக அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தகவல் தெரிவித்ததாக அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்திருக்கிறது.

குடாநாட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு சென்று விநியோகிப்பதற்கான ஆற்றல் அரசாங்கத்திற்கு உண்டு. அதன் பொருட்டு மேற்கொள்ளப்பட்டிருக்கும் கப்பல் போக்குவரத்து ஒழுங்குகளும் போதுமானவையாக உள்ளன என்று - (08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## சற்குணநாதன் மல்லிகாதேவி

தையிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சற்குணநாதன் மல்லிகாதேவி நேற்று (27.12.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் சற்குணநாதனின் அன்பு மனைவியும் ஜனனியின் ( மாணவி, கொக்குவில் இந்துக்கல்லூரி) அன்புத் தாயும் சிறிஸ்கந்தராசா (காந்தன்), காலஞ் சென்ற சிறிஸ்காந்தகுமார் (குட்டி) மற்றும் சரோஜினிதேவி, கமலேஸ்வரிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சதீஸ், ரெனீஸ், தினேஸ் ஆகியோரின் சிறிய தாயும் செல்வரட்ணம் (செல்வம்), சிவானந்தம் (சிவா), பூமணி ஆகியோரின் மைத்துனியும் சேர்மியா, சுபானிகர் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 28.12.2006 மு.ப. 9 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.சிவானந்தன்,
சி.காந்தன்.

(65173)

## இளையதம்பி அப்புத்துரை



புத்தூர் கிழக்கு முருகந்திடலைச் சேர்ந்த இளையதம்பி அப்புத்துரை நேற்று (27.12.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் இளையதம்பி - முத்தாச்சிதம்பதியரின் மகனும் கதிர்காமு - சின்னம்மா தம்பதியரின் மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக்கணவரும் கமலாதேவி, கமலநாதன் (கொழும்பு), சுலோசனா, மல்லிகாதேவி, விஜயலட்சுமி (ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி - புத்தூர்) ஆகியோரின் தந்தையும் தில்லையம்பலம், புனிதவதி (கொழும்பு), சண்முகநாதன், கந்த சத்தியதாசன் (ஆசிரிய ஆலோசகர் - வலிகாமம்), ஆகியோரின் மாமனும் பிரசாந்தன், கோகுலதாசன், ராதிகா, மதுரிக்கா, யதுர்சன், டினோசன், விபூஷன், சிவகாந்தன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.12.2006) பி.ப ஒரு மணிக்கு கிந்திட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகந்திடல்,
புத்தூர் கிழக்கு, புத்தூர். (65177)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## கந்தையா சோமசுந்தரம்

(இளைப்பாறிய தபால் அதிபர்)



கெருடாவில், சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் மட்டுவில் கிழக்கை வதிவிடமாகவும் தற்காலிகமாக இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கில் வசித்தவருமான கந்தையா சோமசுந்தரம் நேற்று (27.12.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை (இளைப்பாறிய ஆசிரியர்) - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சுந்தரராணியின் அன்புக் கணவரும் வைதேகி (கொழும்பு), நந்தகோபன் (4ஆம் வருட மாணவன், வணிகபீடம், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் சந்திரசேகரனின் (M.L.T., பொது வைத்தியசாலை, கொழும்பு) மாமனும் பிரவின், மிதுனா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற மார்க்கண்டு, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் முத்துலிங்கத்தின் மைத்துனரும் மகேந்திரன், மனோகரன், மகேஸ்வரன், (வவி), காலஞ்சென்ற தேவபாலன், மனோரஞ்சினி, சுதாஸ் ஜெகதாஸன் ஆகியோரின் மாமனும் பொ.சுந்தரராஜன் (ஆவரங்கால்), ஜெ.பாலராணி (சிங்கப்பூர்), காலஞ்சென்ற து.புஸ்பராணி, பொ.ரவீந்திரன் ஆகியோரின் மைத்துனருமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2006) வியாழக்கிழமை மு.ப. 10மணிக்கு அவரது தற்காலிக வதிவிடத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி செம்பாடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராமலிங்கம் வீதி,
பூங்கனிச்சோலையடி, திருநெல்வேலி கிழக்கு.
தொ.பே.:0776969011

தகவல்:
சோ.நந்தகோபாலன் (65173) (மகன்).

## நடராசா ஜெகதீஸ்வரன்

(நல்லூர் ப.நோ.கூ.சங்கம்)



கொக்குவில் பிரம்படியைப் பிறப்பிடமாகக் கொண்ட நடராசா ஜெகதீஸ்வரன் நேற்று 27.12.2006 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா- மற்றும் நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் பழனிப்பிள்ளை-பரிபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் கங்கேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜெகனியா, யதுராஜ் (கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2006) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

23,பிரம்படி லேன்,
கொக்குவில். (65162)

தகவல்:
குடும்பத்தினர்.

## சிவகுரு பஞ்சாட்சரம்

(பிரபல முத்துச்சப்பற அமைப்பாளர்)



இணுவில் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீர சைவ குலதிலகர், தெய்வ அலங்கார கலைப்பேரரசு சிவகுரு பஞ்சாட்சரம் 27.12.2006 புதன்கிழமை சிவ ஐக்கியமானார்.

அன்னார் அமரர் மீனாம்பாளின் அன்புக்கணவராவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2006) பி.ப.2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று சமாதிக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் தெற்கு,
இணுவில். (65180)

தகவல்:
பாலசுப்பிரமணியம் (மருமகன்).

## துரைராசா இராஜசிங்கம்

(ஓய்வுபெற்ற கடற்படை களஞ்சியப் பொறுப்பாளர்)

யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா இராஜசிங்கம் 26.12.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.12.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தனையசிங்கம்
சண்முகநாதன் (மைத்துனர்),
சுகிர்தம் சிவானந்தம்,
சுந்தரலிங்கம் விஜயராணி
(சகோதரர்கள்).

124, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். (65183)

# நன்றி நவில்கின்றோம்

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட



ஓதுவார் அமரர்
**செல்லையா நடராசா**
(ஆனந்தி நடராசா)

10.12.2006 அன்று இறைபதமடைந்தார். அவருடைய இறுதிக் கிரியையில் கலந்து துயர்பகிர்வினை மேற்கொண்ட உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தகவல்:
ஞான.திருக்கேதீஸ்வரன் (மருமகன்).
(ஆசிரியர்-யா/மத்திய கல்லூரி)

(65171)

# கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழக உறுப்பினர் அ.நிர்மலனின்

பாசமிகு தந்தை

**சண்முகம் அருந்தவநாதன்**

(இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர் - நில அளவைத் திணைக்களம்)

அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வளர்மதி முன்னேற்றக்கழகமும், வளர்மதி நிறை வாழ்வகமும்.**

(சி/51690)

# JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE

## விவசாய சான்றிதழ் பயிற்சிநெறி

பயிரியல் , பூங்கனியியல், விவசாய மூலதத்துவம், மிருக பரிபாலனம் ஆகிய பாட நெறிகளை உள்ளடக்கிய நான்கு மாத கால இலவச பயிற்சி நெறிக்கு க.பொ.த.(சாதாரணம்) கல்வி கற்ற 17 - 25 வயதுக்குட்பட்ட இருபாலரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் 03.01.2007 காலை 9மணிக்கு நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித் தகைமைப் பத்திரம், கிராம சேவையாளரின் வதிவிட சான்றிதழ், இரு நற்சான்றிதழ் பத்திரங்களுடன் சமுகமளிக்கவும்.

பயிற்சி நெறிக்காலத்தில் உதவு தொகை வழங்குவதுடன் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:

**அதிபர்,**
**யாழ்ப்பாணக் கல்லூரி**
**விவசாய நிறுவனம்,**
**மருதனார்மடம் - சுன்னாகம்.**

(65104)

# நெஞ்சைத் தொடும் 16ஆம் நாள் நினைவாஞ்சலி



திருமதி
**கமலா மாணிக்கவாசகர்**
(Staff, Leopards Hill Secondary School, Lusaka, Zambia)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11.08.1946 | 14.12.2006 |

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எமக்கு நல்வழி காட்டிய அன்புத் தெய்வத்தை இன்று நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகின்றோம். உடல் மறைந்து போனாலும் உள்ளங்களில் என்றும் உறைந்திருந்து ஒளிவீசிக் கொண்டேயிருக்கப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது துயரில் பங்குபற்றிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்களை நினைவு கூரும்
குடும்பத்தினர்.

கரணவாய் வடக்கு.
உடுப்பிட்டி.
[illegible]
கொழும்பு-06

(சி/51693)

# அறிவித்தல்

**தரம் 5-2006 மாணவர்கள் தமது பாடசாலை விடுகைப் பத்திரத்தைப் பெறுவதற்கு 30.12.2006 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பெற்றோருடன் பாடசாலைக்கு வருகை தரவும்.**

அதிபர்,
யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.

# ஈரவிழிகளுடன் ஓராண்டு



**கிருஷ்ணன் விமலேஸ்வரன்**

(யாழ்.மத்திய கல்லூரியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்)

| அன்னையின் மடியில் | அரக்கனின் அழிப்பில் |
|---|---|
| 07.04.1974 | 24.12.2005 |

திதி : அட்டமி 28.12.2006

பிறப்பிற்கும் இறப்பிற்கும் நடுவில் நீ வாழ்ந்த காலங்கள் வசந்தம் தான்
காலன் கண்ட கனவின் முடிவில் நீ காலத்தை வென்றவனாகிவிட்டாய்
ஞாலத்தில் நீ வாழ்ந்த நாள் மட்டும் நெஞ்சினில் நிலைத்து உன் ஞாபகங்கள்
காலத்தின் ஓட்டத்தில் கரையாது நாம் வாழும் நாள் மட்டும் அழியாது!

இன்று நடைபெறும் மதிய போசனத்தில் அனைவரும் கலந்து கொள்ளவும். (சி/51641)

தவசிகுளம்,
கொடிகாமம்.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இந்திரா செல்வராசா

புங்குடு தீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.66/3, ஸ்ரீ சரணங்கரா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திரா செல்வராசா 26.12.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் செல்வராசாவின் (பிரான்ஸ்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற முருகேசு உடையார்- சிவயோகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கனகசபை-செல்லம்மா தம்பதியரின் மருமகளும் மனோஜ்கான், கிருஷ்ணகான், கனகேஷ்கான், வினோத்கான் ஆகியோரின் பாசமிகு தாயுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (28.12.2006) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொகுவல இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

66/3, ஸ்ரீ சரணங்கரா வீதி,
களுபோவில, தெஹிவளை.
தொ.பே : 0112 726845.

தகவல்:
மு.சிவபாதம்
(மைத்துனர், உதவிக் கல்விப் பணிப்பாளர்-வேலணை).

## சின்னையா லோககுகதாசன்

(ஓய்வு பெற்ற மின்சார சபை ஊழியர்)



சுண்டிக்குழியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா லோககுகதாசன் நேற்று (27.12.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா- பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மயில்வாகனம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும் சந்திராவதியின் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்) அன்புக்கணவரும் மங்கையர்க்கரசி, காலஞ்சென்றவர்களான குணசவுந்தரவல்லி, சுகிர்தவதி, திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் விமலாதேவி, சுசிலாவதி, புஸ்பலீலாவதி, சிவபுலோகசுந்தரம் (கனடா), காலஞ்சென்ற இந்திராவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சாந்தினி, குமுதினி, மதிவாணன் ஆகியோரின் அன்பு மாமனும் கிறிஸ்கீசன், வாகீசன், லோகினி ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2006) மு.ப.10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

16,காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

தகவல்:
சந்திராவதி (மனைவி).

(65139)

## துரை ஜெயபாலு (பாலு)



சுன்னாகம் டாக்டர் சுப்பிரமணியம் வீதியைச் சேர்ந்த துரை ஜெயபாலு (பாலு) 26.12.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுன்னாகம் துரை - நவலோக பூபதியின் அருமை மகனும் செல்லையா - இராசமணி தம்பதியரின் மருமகனும் ஸ்ரீபதியின் அன்புக் கணவரும் ஸ்ரீஸ்கந்தராசா, ஈஸ்வரநாதன், நகேஸ்வரன் (கொழுந்து - சுன்னாகம் வர்த்தகர்), நாகநந்தினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சிவமலர், விமலேஸ்வரி, (கு.சு.சே. உத்தியோகத்தர், தெல்லிப்பழை), விஜயகுமாரி, சர்வானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் விதுஷன், நித்தியா, மதுரங்கா, ரேணுஷன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் சாஜிகாவின் (சுவிஸ்) அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 28.12.2006 மு.ப 10மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம். (65146)

தகவல்:
மனைவி, சகோதரர்கள்.

## திருமதி செல்லையா சிவசோதி



இருபாலையைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழை துர்க்காபுரத்தை வசிப்பிடமாகவும் நாச்சிமார்கோயிலடியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா சிவசோதி நேற்று (27.12.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் செல்லையாவின் அன்பு மனைவியும் சிவசுதன் (ஆசிரியர் - காரைநகர்), செல்வறதன்(உயர் தொழில்நுட்ப மாணவன் -2004), சிவதர்சன் (யாழ்.பல்கலைக்கழகம் 1ஆம் வருடம்) ஆகியோரின் அன்புத் தாயும் பவதாட்சாயினியின் அன்பு மாமியும் வேலாயுதம், கற்பகம், சிதம்பரம், காலஞ்சென்ற அரியகுட்டி, பழனிப்பிள்ளை, காலஞ்சென்ற பூபதி, காசிநாதன் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2006) வியாழக்கிழமை முற்பகல் 8.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

566/1, கே.கே.எஸ். வீதி,
(மில்க்வைற் முன் ஒழுங்கை),
யாழ்ப்பாணம்.

தகவல்:
சி.செல்லையா (கணவர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேக்கரிகளுக்கு கேக் உற்பத்திப் பொருள்கள்

யாழ்ப்பாணம், டிசெ.28

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க அங்கத்தவர்கள் சகலரையும் இன்று வியாழக்கிழமை சங்கத்திற்கு வந்து கேக் உற்பத்திப் பொருள்களைப் பெற்று உற்பத்தி செய்யுமாறு சங்கத்தின் செயலாளர் அங்கத்தவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

'கேக்' உற்பத்தி செய்து கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்யாத வெதுப்பகங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை-

கேக் தேவைப்படும் பாவனையாளர்கள் தமக்கு அருகிலுள்ள வெதுப்பகங்களுடன் தொடர்புகொண்டு முற்பதிவு செய்துகொள்ளுமாறும் செயலாளர் கேட்டுள்ளார். (202)

## தேங்காய்த் திருட்டு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.28

குடாநாட்டில் அண்மைக் காலமாகத் தேங்காய்த் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

கொக்குவில், இணுவில் ஆகிய பிரதேசங்களிலேயே இத்திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளளன.

அண்மையில் கொக்குவில் பகுதியிலுள்ள வீடொன்றில் புகுந்த திருடர்கள் தேங்காய்களை வீட்டார் முன்னிலையிலேயே பிடுங்கியதுடன் அவர்களைப் பயமுறுத்திவிட்டும் சென்றுள்ளனர்.

இணுவில் பிரதேசத்தில் ஆலயம் ஒன்றில் கும்பத்துக்கு வைத்திருந்த தேங்காய்களையும் திருடர்கள் அபகரித்துள்ளனர். (202-139)

## சிக்குன் குனியா விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ.28

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினரின் ஏற்பாட்டில் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடிகாமம் சந்தை மைதானத்தில் சிக்குன் குனியா நோய்க்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

இதில் நோயாளர்களுக்கு மருந்துகளும் விநியோகிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203)

## 81 பேருக்கு மகாபொல புலமைப்பரிசில்

யாழ்ப்பாணம், டிசெ.28

யாழ்.தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் முதலாம் வருடத்திற்கு அனுமதி பெற்ற மாணவர்களில் 81 பேருக்கு மகாபொல புலமைப்பரிசில் கிடைத்துள்ளது. தெரிவு செய்யப்பட்டவர்கள் உடனடியாக அலுவலகத்திற்குச் சமூகளித்து விண்ணப்பிக்குமாறு நிறுவனப் பணிப்பாளர் வே.கருணாநிதி கேட்டுள்ளார்.

புலமைப்பரிசிலுக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் விவரங்களை உதயன் அலுவலகத்தில் பார்வையிடலாம். (202-88)

## பௌதிக வளங்கள் குறித்து ஆய்வு

தென்மராட்சி, டிசெ.28

அரச பாடசாலைகளில் தற்போது உள்ள பௌதீக வளங்கள் குறித்த ஆய்வினைக் கல்வி அமைச்சின் தரவு முகாமைத்துவ ஆய்வுக் கிளையினர் நடத்தி வருகின்றனர்.

இதற்குத் தேவையான தரவுகளைத் திரட்டுவதற்காகச் சகல வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் படிவங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இவ்வாண்டில் பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட சகல நடவடிக்கைகள் தொடர்பாகவும் அந்தப் படிவத்தில் விவரங்கள் கோரப்பட்டுள்ளன. (202)

## நுளம்புத்திரி திருடிய நபர் படையினரால் மடக்கிப் பிடிப்பு

தென்மராட்சி, டிசெ.28

வலி.கிழக்கு சிறுப்பிட்டிப் பகுதியில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடையில் 65 நுளம்புத்திரி பெட்டிகளைத் திருடிச் சென்ற உடுப்பிட்டி வாசியை படையினர் மடக்கிப் பிடித்தனர்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்றது. படையினரால் பிடிக்கப்பட்ட நபர் நேற்றுமுன்தினம் கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

# குத்தகை விவசாயிகளுக்கு மானிய உரம் இல்லையாம்

## ஆணையாளருக்கு முறைப்பாடு செய்ய முடிவு

கைதடி கமநல சேவைகள்நிலைய பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் குத்தகை அடிப்படையில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளும் நெற் செய்கையாளருக்கு மானிய அடிப்படையிலான உரம் வழங்கப்படவில்லை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

சொந்த வயல்களிலும் மற்றும் குத்தகை அடிப்படை வயல்களிலும் காலபோக நெற்செய்கை மேற்கொள்வோரின் விவரங்கள் அந்தந்த விவசாய சம்மேளனங்கள் மூலம் கமநல சேவைகள் நிலையத்திற்கு வழங்கப்பட்டன.

அண்மையில் கமநல சேவைகள் நிலையத்துக்கு உர வகைகள் வந்த போது சொந்த வயல்களில் நெற்செய்கை மேற்கொண்டவர்களுக்கு மட்டுமே உரவகைகள் விநியோகிக்கப்பட்டது எனவும் -

குத்தகை அடிப்படையில் நெற்செய்கை மேற்கொண்டவர்களுக்கு உரம் விநியோகிக்கப்படவில்லை எனவும் தெரிவித்தனர். தம்மால் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்யைவயல்களில் பயன்படுத்துவதற்கு உரவகை விநியோகிக்க கோரி யாழ். மாவட்ட கமநல திணைக்கள உதவி ஆணையாளருக்கு குத்தகையாளர்கள் முறையிட்டுள்ளனர். (202)

# மோதல்கள் யாவற்றுக்கும் சமாதான தீர்வு உடன் காணப்பட வேண்டும்

## பாப்பரசர் 61 மொழிகளில் நிகழ்த்திய உரையில் தெரிவிப்பு



வத்திக்கான், டிசெ.28

உலகில் இடம்பெற்று வரும் மோதல்கள் அனைத்திற்கும் உடன் சமாதானத் தீர்வு காணப்பட வேண்டும் என பரிசுத்த பாப்பரசர் 16 ஆம் பெனடிற் நத்தார் ஆசிச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

வத்திக்கானில் உள்ள புனித பீற்றர் சதுக்கத்தில் இடம்பெற்ற நத்தார் தின ஆராதனையின் போதே பாப்பரசர் இதனைத் தெரிவித்தார்.

கூடியிருந்த மக்களுக்கு நத்தார் வாழ்த்தை 61 மொழிகளில் பாப்பரசர் தெரிவித்தார். தமிழ், சிங்களம், மலையாளம் ஆகிய மொழிகளிலும் அவர் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இலங்கை, லெபனான், ஈராக் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இடம்பெறும் வன்செயல்கள் குறித்தும் அவர் கவலை வெளியிட்டார்.

உலகில் பசிக் கொடுமை, ஆதரவற்ற நிலை என்பன போன்ற கொடுமைகளை எதிர்கொள்ளும் விதத்தில் ஒவ்வொரு குழந்தையும் வீரர்கள் போல் பிறக்கின்றனர். இக்குழந்தைகள் அனைவருக்கும் ஆண்டவனின் கருணை ஒளி போர்வையாக படரவேண்டும் என பிரார்த்தனை செய்வோம். (202)

**யாழ். பிரதேச செயலர் பிரிவு**

# பங்கீட்டு அட்டைகளை மீளாய்வு செய்ய அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், டிசெ.28

யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பிரதான குடியிருப்பாளர்கள் தமது பங்கீட்டு அட்டைகளை மீளாய்வு செய்யுமாறு பிரதேச செயலாளர் கேட்டுள்ளார்.

இதுவரையில் தமது பங்கீட்டு அட்டைகளை மீளாய்வு செய்யாதவர்கள் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு தமது தேசிய அடையாள அட்டையுடன் பிரதேச செயலகத்தில் வந்து பங்கீட்டு அட்டைகளை மீளாய்வு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மீளாய்வு செய்யப்படாத பங்கீட்டு அட்டைகளிற்கு ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் எவ்வித பங்கீட்டுப் பொருள்களும் வழங்கப்படமாட்டாது என்று பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

# தென்மராட்சியில் அதிகரித்த விலையில் தொடர்ந்தும் றஸ்க் வகைகள் விற்பனை

தென்மராட்சி, டிசெ.28

தென்மராட்சி பிரதேசத்தின் சில இடங்களில் பேபி றஸ்க், வட்ட றஸ்க், மடத்தல் ஆகியவை அதிகரித்த விலையில் விற்கப்படுகின்றன.

யாழ்.அரச அதிபரினால் இப்பொருள்களுக்கான விலை நிர்ணயம் செய்யப்பட்டு உற்பத்திக்கு அனுமதி வழங்கிய பின்னரே இவை விற்பனைக்கு வந்துள்ளன. ஆயினும் விலை நிர்ணயம் செய்தபின்னரும் இப்பொருள்கள் அரச அதிபரின் அறிவிப்பு வரு முன்னரே உற்பத்தி செய்யதாகக் கூறி வர்த்தகர்கள் விற்பனை செய்கின்றனர்.

இப்பொருள்கள் தாராளமாகக் கடைகளில் உள்ளபோதிலும் அரச அதிபரினால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட இருமடங்கு விலையில் விற்கப்படுகின்றன என நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

# குடாநாட்டில் அமைச்சர் தேவானந்தா முன்னெடுக்கும் சமூக நலத் திட்டங்கள்

யாழ்.மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பல்வேறு நலத் திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றார் என அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

✱ நாவற்குழி 300 வீட்டுத் திட்டப் பகுதியில் மின் இணைப்பு, விளையாட்டு மைதானம் புனரமைப்பு, கழிவுநீர்க் கால்வாய்கள் சுத்திகரிப்பு போன்ற வேலைத் திட்டங்கள் அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்றன.

வீடுகளைப் புனரமைக்கவும் அவற்றுக்கான உறுதிகளைப் பெற்றுக்கொடுக்கவும் அமைச்சர் நடவடிக்கை எடுக்கவுள்ளார்.

✱ யாழ்.மாவட்டத்தில் தங்கியுள்ள பிற மாவட்டங்களில் பணிபுரியும் அரச ஊழியர்கள் தமக்கு யாழ்ப்பாணத்துக்கே இடமாற்றம் பெற்றுத் தருமாறு அமைச்சரிடம் கோரியுள்ளனர்.

✱ யாழ்.மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கான மருத்துவ உதவித் தொகைகளை வழங்கும் நடவடிக்கைகளை விரைவில் முன்னெடுக்கவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உதவி பெறும் நிலையிலுள்ள - இதுவரை பதிவுசெய்யாதோர் அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் அல்லது அருகில் உள்ள பிரதேசசெயலர் அலுவலகங்களில் பதிவுசெய்யலாம்.

✱ சிக்குன்குனியா நோயால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகள் மற்றும் வயோதிபரின் நலன் கருதி நோய் எதிர்ப்புச் சக்தியைத் தரக்கூடிய போஷாக்கு உணவுப் பொருள்களை வழங்க அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

✱ குடாநாட்டில் உள்ள வலுவிழந்தவர்களுக்குத் தேவையான உபகரணங்கள் அமைச்சரின் ஏற்பாட்டில் அவர்களுக்கு வழங்கப்படவுள்ளன. (202)

# மீனவர்களின் வாழ்வியலை உயர்த்த உதவி

யாழ்ப்பாணம், டிசெ.28

கடல் வலயத் தடையால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் ஜீவனோபாயத்தை உயர்த்தும் முகமாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் சாடியில் வளர்க்கும் வீட்டுத் தோட்ட செயன் முறையினை ஆரம்பித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள நிறுவனத்தின் திட்டக் கிராமங்களான கற்கோவளம், புனித நகர் ஆகிய கிராமங்களில் நிறுவனத்தால் ஏற்கனவே கடற்றொழில் உபகரங்களைப் பெற்ற 139 கடற்றொழில் பயனாளிகளும் 50 விதவைகளும் நன்மையடையவுள்ளனர்.

இதேவேளை, கடந்த வாரம் மேலும் 50 பயனாளிகளுக்கு வீட்டுத் தோட்ட பயிர்கள் சாடிகளில் வழங்கப்பட்டுள்ளதோடு இனி வருங் காலங்களில் இத்திட்டமானது தென்மராட்சிப் பிரதேசத்திலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் வி.பி.சிவநாதன் தெரிவித்தார்.

## கல்வியியல் கல்லூரி ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் புதிய கல்வியாண்டுக்கான கல்விச் செயற்பாடுகள் எதிர்வரும் 4ஆம் திகதி ஆரம்பமாகின்றன. கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்கள் அனைவரும் எதிர்வரும் 3ஆம் திகதி மாலை 5 மணிக்கு விடுதிகளுக்கு சமுகமளிக்குமாறு உபபீடாதிபதி எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை கேட்டுள்ளார்.

## சமய சந்நிதியில்

தென்மராட்சி, டிசெ.28

மீசாலை வெள்ளை மாவடி திருநீலகண்டப் பிள்ளையார் ஆயத்தில் வைகுண்ட ஏகாதசி விசேட பூஜைகள் நாளைமறுதினம் சனிக்கிழமை நடைபெறும்.

அன்றைய தினம் நான்கு சாமப் பூசைகளுடன் விசேட அபிஷேகங்களும் நடைபெறும். (202)

## அதிபர்களுக்குச் செயலமர்வு

யாழ்ப்பாணம், டிசெ.28

யாழ்.வலயத்தைச் சேர்ந்த 1ஏபி, 1 சி, வகை II ஆகிய பாடசாலைகளின் அதிபர்களுக்கான வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும் செயமலர்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் உள்ள ஆசிரியர் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை -

செயன்முறைத் திறன்களும் தொழில்நுட்பத் திறன்களும் பாடத்தைக் கற்பிக்கும் கோப்பாய் கோட்ட ஆசிரியர்களுக்கும் நல்லூர் கோட்டத்தில் இதுவரை செயலமர்வில் பங்குகொள்ளாத ஆசிரியர்களுக்கும் நாளையும் நாளைமறுதினமும் காலை 8.30 மணி தொடக்கம் இந்து மகளிர் கல்லூரியில் செயலமர்வு நடைபெறும் என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.வெல்வரத்தினம் தெரிவித்தார். (202)

## உள்ளூராட்சி ஓய்வூதியர்களில் வவுச்சர்கள் கிடைக்காதோருக்கு

யாழ்ப்பாணம், டிசெ.28

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி ஓய்வூதியர்களில் ஒரு பகுதியினருக்கு நவம்பர் மாதத்திற்கான வவுச்சர்கள் இன்னும் வந்துசேரவில்லை என்று யாழ்.மாவட்ட உள்ளூராட்சி ஓய்வூதியர் சங்கத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

வவுச்சர்கள் கிடைக்கப்பெறாதவர்கள் யாழ்.செயலக பிரதம கணக்காளரிடம் மாதிரி வவுச்சர்களைப் பெற்று ஓய்வூதியத்தைப் பெற முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஓய்வூதிய வவுச்சர்கள் கிடைக்காதவர்கள் உரிய வங்கிகளுக்குக் கொடுப்பனவுகள் வந்துசேர்ந்துள்ளனவா என உறுதிப்படுத்தி அதனை செயலக பிரதம கணக்காளரிடம் சமர்ப்பிப்பதன் மூலம் மாதிரி வவுச்சர்களைப் பெறமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தபால் மூலம் உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கு வவுச்சர்கள் அனுப்பிவைக்கப்பட்டபோதும் ஒரு பகுதி ஓய்வூதியர்களுக்கு அவை இன்னும் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (203)

## ஊரெழு பிரதேசத்தில் சிக்குன் குனியா முகாம்

யாழ்ப்பாணம், டிசெ.28

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.மாவட்டக் கிளையினரின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஊரெழு பாரதி சனசமூக நிலையத்தில் இலவச சிக்குன் குனியா மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது என சங்கத்தின் கோப்பாய் பிரிவின் செயலாளர் இ.மயில்வாகனம் தெரிவித்தார். (202)

## 'ஒலிப்பியாட்' போட்டியில் வடமராட்சி மாணவனுக்கு வெண்கலப் பதக்...

கரவெட்டி, டி... 28

இலங்கை பௌதிகவியல் நிறுவனத்தால் நடத்தப்பட்ட 'ஒலிப்பியாட்' போட்டியில் வடமராட்சி துன்னாலையைச் சேர்ந்த மாணவன் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.

கமலேஸ்வரன் கமலகோபன் என்னும் மாணவனே பதக்கம் வென்றுள்ளார். இவர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவரும் மொறட்டுவ தொழில்நுட்பக் கல்லூரியின் தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கைநெறியின் முதல் வரு... மாணவனும் ஆவார்.

கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தால் நடத்தப்பட்ட விழாவில் வைத்து இவருக்குப் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (202-70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**செல்வன் க.பகீரதன்**

யாழ். மத்திய கல்லூரியில் கல்வி பயின்று தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 148 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்குப் பாராட்டுவதோடு, அவரை நல்வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பெற்றோர்,
அம்மம்மா, பெரியம்மா,
பெரியப்பா, ராஜி அன்ரி.

*158/2, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(65098)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



டச்சுறோட், உடுவிலைச் சேர்ந்த
சிவபாலசுப்பிரமணியம் - தமிழ்ச்செல்வி
தம்பதியரின் செல்வப் புதல்வி

**கீர்த்திகா**

(மாணவி உடுவில் மகளிர் கல்லூரி)

2006ஆம் ஆண்டு நடைபெற்ற 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 154 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டுப் பாராட்டுவதோடு அவர் மேன்மேலும் பரீட்சைகளில் சித்தியடைந்து சிறப்புற வாழ்த்துகின்றோம்.

அப்பப்பா, அப்பம்மா,
சித்தப்பாமார் மற்றும்
மாமா, அத்தை.

*உடுவில் மேற்கு,*
*சுன்னாகம்.*

(65040)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.நவாலி சென்.பீற்றேஸ் பாடசாலை
மாணவன்

**செல்வன் சோதிலிங்கம் புவிசன்**

2006ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 160 புள்ளிகளைப் பெற்றமையையிட்டு அவரை ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்களைப் பாராட்டுவதோடு, அவர் மென்மேலும் வாழ்வில் உயர்ச்சி பெற வாழ்த்துகின்றோம்.

*கலையரசு வீதி, நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.*

(65113)

உற்றார், உறவினர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**செல்வி செல்வராஜா நிரோஜினி**

சிறுப்பிட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த செல்வராஜா நிரோஜினி 2006 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 137 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

அவர் மென்மேலும் கல்வியில் சிறப்புப் பெற்று வளர எமது கிராம மக்கள் சார்பில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஜனசக்தி ச.ச. நிலையம்,
ஜனசக்தி விளையாட்டுக் கழகம்,
ஜனசக்தி முன்பள்ளி,
ஜனசக்தி விண்மீன் சிறுவர் கழகம்,
ஜனசக்தி ஸ்ரார் இளைஞர் கழகம்,
யா/ சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை பழைய மாணவர் சங்கம்.

*ஜனசக்தி,*
*சிறுப்பிட்டி மேற்கு,*
*நீர்வேலி.*

(65082)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ நாவற்காடு கணபதிப்பிள்ளை
வித்தியாலய மாணவன்

**செல்வன் பாலசுந்தரம் கயந்தன்**

2006 ஆம் ஆண்டு ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 137 புள்ளிகள் பெற்று சித்தியடைந்தமையையிட்டு மனமார வாழ்ததுவதுடன், இவர் பரீட்சையில் சித்தி பெற ஊக்குவித்த வித்தியாலய அதிபர், கற்பித்த ஆசிரியர் மற்றும் தனியார்கல்வி நிறுவன ஆசிரியர் ஆகியோருக்கு நன்றியினையும் தெரிவித்துக்கொள்கின்றோம்

அப்பா, அம்மா, அம்மம்மா ,
பெரியம்மாமார், பெரியப்பாமார், சித்திமார்,
சித்தப்பாமார், மாமா, மாமி.

(அ 51685)

## 2 ஆம் ஆண்டு நினைவுகளில்



அமரர்

**நடராஜா வடிவம்மா**

*திதி: 26.12.2006*

| *மண்ணில்* | *விண்ணில்* |
|---|---|
| *06 - 11 - 1913* | *17 -12-2004* |

கொஞ்சுமொழி பேசிக் குறுநடையழகூட்டி...
கெஞ்சினாலும் கிடைக்காத குடும்பத்
தலைவியம்மா...
நெஞ்சாறா நினைவுகளில் கலங்கிடும் மகளும்...
கொஞ்சிக்குலாவிய பாட்டியைத் தேடும்
பேரரும், பூட்டரும்
வஞ்சகன் காலனவன் கணக்கை முடித்திடினும்...
நெஞ்சினில் நிழலாடும்...
நினைவுகள்தான் நீங்கிடுமோ...

(26.12.2006 ஆம் திகதி உதயன் ஐந்தாம் பக்கத்தில் வெளியான இதே விளம்பரத்தில் அச்சாகிய படம் இன்னொருவரது ஆகும். ஏற்பட்ட தவறுக்கு வருந்துகின்றோம்.)

**29/1, ஈச்சமோட்டை,**
**கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*எமது பாடசாலை*
*மாணவன்*

**செல்வன்**
**கிருஷ்ணமூர்த்தி**
**தனுஷன்**

*2006 ஆம் ஆண்டு ஐந்தாம்தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 147 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**யா/இயற்றாலை அ.மி.த.க. பாடசாலை**
**வரணி.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

*ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில்*
*யா/கொழும்புத்துறை துரையப்பா*
*வித்தியாலத்தைச் சேர்ந்த*

**சங்கவி ஸ்ரீபாலவேந்தன் -154 புள்ளி**
**நிருஷா வீரகுமார் -157 புள்ளி**

*பெற்ற இவர்களையும் மேலும் 100 புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களையும் மனமார வாழ்த்துவதோடு, இவர்களை வழிப்படுத்திய ஆசிரியை திருமதி சாந்தினி நாகேஸ்வரன் அவர்களையும் பாராட்டுகின்றோம்.*

பாடசாலைச் சமூகம்,
**யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்.**

### தேவை

போட்டோக் கொப்பி மெசின், தொலைத்தொடர்பு நிலையத்துக்கு தேவையான தளபாடங்கள் என்பன தேவை. தொடர்பு: 021 459 1926,
021 459 1451

## வாழ்வக உதவியாளர் பதவி வெற்றிடம்

*சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் என்னும் முகவரியில் அமைந்துள்ள விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகத்தில் உதவியாளராகப் பணியாற்ற விரும்புகின்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விடுதியில் தங்கியிருந்து பணியாற்றக் கூடியவர்கள் மட்டுமே இப் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.*

*உங்களைப் பற்றிய சுய விவரங்களுடன் உங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 10.01.2007 இற்கு பிந்தாமல்* **தலைவர்,விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்** *என்னும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அன்றி நேரிலோ அனுப்பி வைக்கவும்.*

(அ 51677)

## துயர் பகிர்கின்றோம்



*ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் 50 ஆண்டுகளாக திருமுறைகள் ஓதி வழிபாடாற்றிய ஓதுவார், சங்கீத பூஷணம்*

**வித்துவான்**
**இராமலிங்கம் நடராசா**

*அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் அனுதாபங்களைத் தெரிவித்து, அவரின் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.*

**வை.இரகுநாத முதலியார் குடும்பம்,**
**பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளர்.**

## கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம்

*பன்னாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வரத்தலம் கற்பக விநாயகர் ஆதினகர்த்தாவும் எமது மதிப்புக்குரிய அந்தணப் பெருந்தகையுமான அருமறை ஓதும் செம்மலும் பன்னாலை கிராமத்தின் பொன்னான குருவுமாகிய*

**சிவஸ்ரீ கி.சபாரத்தினக்குருக்கள்**

*அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது குடும்பத்தின் சார்பில் இதயங்கனிந்த கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கின்றோம்.*

[illegible] குருக்கள்
சிவன் தேவஸ்தானம், திருநெல்வேலி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**செல்வன்**
**சிவானந்தன் கிருஷன்**

(யா/ யாழ்ப்பாணக் கல்லூரி)

2006ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 145 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த கிருஷனை பல்கலையும் கற்று வாழ்வில் என்றும் உயர்ந்திட வாழ்த்துகின்றோம்.

உளமகிழ்ந்து வாழ்த்தும்
ஆனந்தன் சித்தப்பா,
சித்தி, டினுஜன்.

*இல. 38/1, கொழும்புத்துறை வீதி,*
*சுண்டுக்குளி.*

(65042)

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**அமரசிங்கம் ஸ்கந்தபுஸ்பதேவி**
(சங்கீத பூஷணம்)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 23-10-1946 | 28-12-1999 |

ஆண்டுகள் எட்டு ஓடினாலும்-உம்
அன்புமுகம்தான் மறைந்திடுமோ
நீண்டதுயில் நீர் ஆனாலும்-உம்
நினைவு எம்மைவிட்டு நீங்கிடுமோ

தகவல்:
கணவர் ,பிள்ளைகள்,
மருமகன்,பேரப்பிள்ளை.

## அந்தியேட்டி அழைப்பு



*29.11.2006 வியாழக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்*

அமரர்
**வடிவேலு சண்முகநாதன்**
*(வைத்தியர்)*

*அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று(28.12.2006)வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.*

வட்டு. கிழக்கு,
வட்டுக்கோட்டை. - (65005)

மனைவி, பிள்ளைகள்.

## நினைவுகளில் நீங்காத முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| *மண்ணில்* | *விண்ணில்* |
|---|---|
| *20 - 06 - 1933* | *08 - 01 - 2006* |



**அமரர் மாணிக்கம் செல்லம்மா**

*திதி: நவமி -28.12.2006*
*ஓராண்டு ஆனதுவோ*
*இப்பொழுதும் இதயம் வெடிக்கிறது*
*என்றும் உன் நினைவில்*
*வாழ்கின்றோம்.*

-குடும்பத்தினர்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர். (65058)

## மரண அறிவித்தல்

*நாகரட்ணம் பத்மநாதன்*



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான ஓய்வுபெற்ற யாழ்ப்பாணம், கச்சேரி பிரதம சிறாப்பர் நாகரட்ணம் பத்மநாதன் 02.12.2006 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரட்ணம் - பாக்கியம் தம்பதியரின் புத்திரனும் இராஜலெட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வீரவாகு- பூரணம் தம்பதியரின் மருமகனும் சுகந்தினி, ஷாமினி (பிரான்ஸ்), செந்தில்ரூபன், அனுசுயா, செந்தூரன், செந்தில்குமரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஷ்ணன், புவனன், விஜிதா, சுகந்தன், கோமதி, கலைமகள்ஆகியோரின் அன்பு மாமனும் கீத், சிந்திகா, சுஜித், ஷாருங்கா, சுமன்,ஷஜந்த், ரோஷான் ஆகியோரின் அன்புப் பேரனும் விவேகானந்தன், காலஞ்சென்ற பூலோகநாதன், குலசேகரம், துரைராஜசேகரம், சரவணபவானந்தன், தவரஞ்சிதம் சிவதாசன், சச்சிதானந்தன், நித்தியானந்தன் ஆகியோரின் அன்புச் சகோரனும் சரஸ்வதி, காலஞ்சென்ற முத்துக்குமார், சுந்தரலிங்கம், காலஞ்சென்ற மகாலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அவரது பூதவுடல் 04.12.2006 திங்கட்கிழமை கனடாவில் தகனஞ் செய்யப்பட்டது.

தொடர்புகளுக்கு -905 554 1002
செந்தூரன் -647 401 8234 (65110)
குமரன்-647 273 7359
செந்தில்ரூபன்-647 828 1837

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08 | 11 |
| 11 | 12 |
| 1933 | 2002 |

### அமரர் கிருஷ்ணபிள்ளை செல்லத்துரை

திதி: பூர்வபக்க அட்டமி 28.12.2006 (வியாழக்கிழமை)

அன்பை வளர்த்தாய் ஆறுதல் பலவுந் தந்தாய்
இன்முகம் காட்டி இனியவை தினமும் பேசினாய்
பன்முகப் பார்வையால் பலரையும் கவர்ந்த உத்தமரே
உன்நினைவு உள்ளத்து ஒளியாகி நிறைவாகி நிற்குதையா

செல்லத்துரை மகேஸ்வரி (மனைவி),
விஸ்வலிங்கம் ஜெயராணி (மகள்),
பாஸ்கரன் ஜெபிதா (கனடா),
சுதந்திரதாஸ் கவிதா (கனடா), ஜெகஜீவன் (கனடா), விதுஷன் (கனடா),
பேரப்பிள்ளைகள்.

அல்வாய் வடக்கு,
அல்வாய். (65105)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| அன்னை மடியில் | ஆண்டவன் திருவடியில் |
|---|---|
| 20 | 28 |
| 05 | 11 |
| 1927 | 2006 |

### அமரர் சுப்பையா தம்பித்துரை

(நொதேன் மோட்டோர்ஸ் வேக்ஸ், ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் ஸ்தாபகரும், உரிமையாளரும், பிரபல தொழிலதிபரும்)

அன்பும் ஆதரவும் பண்பும் பாசமும் மிக்க ஐயாவே!
இன்முகத்துடன், புன்னகை புரிந்து எல்லோர் உள்ளத்திலும்
நீங்காத இடத்தைப் பிடித்து சுவிரக்கம் காட்டும் - தெய்வமே!
பிரபலமான தொழில் ஸ்தாபனத்தை ஸ்தாபித்து பல பணியாளர்களுக்கு
வேலை வாய்ப்பைக் கொடுத்து உங்கள் குடும்பங்களையும் உங்கள்
பணியாளர்கள், சுற்றத்தினர் குடும்பங்களையும் உயர்வடையச் செய்தீர்கள்
உங்கள் பிரிவைத் தாங்க முடியாது தவிக்கின்றோம் ஐயா!

31ஆம் நாளாகிய வியாழக்கிழமை (28.12.2006) இன்று உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக் கின்றோம்.

28.11.2006 எங்கள் குடும்பத் தலைவர் சிவபதமடைந்த செய்தியை அறிந்து எங்களுக்கு சகல விதத்திலும் ஆறுதல் நல்கிய அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

எம்.எஸ்.லேன், கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (65107)இ - குடும்பத்தினர்.

## 32ஆம் ஆண்டு நினைவலைகள்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 16 | 22 |
| 03 | 12 |
| 1927 | 1974 |

### திருமதி கனகாம்பிகை சபாரத்தினம்

(திதி 28.12.2006)

குடும்பத்தின் குல விளக்காய்
ஒளி வீசும் தாயே
கும்பிடும் உன் உறவுகளை
காத்திடுவாய் நீயே
குவலயத்தில் நாம் சிறக்க
பணி செய்த தாயே
குறைவின்றி நாம் வாழ
துணை செய்வாய் நீயே

நி.மு: 'திலக வாசம்' தபாலக வீதி, சாவகச்சேரி.
த.மு.: இல. 5, கல்லடி வீதி, சாவகச்சேரி.
(சி-51684) - குடும்பத்தினர்.


## சிறு விமான சேவை

யாழ். - கொழும்பு - யாழ்.விமான சேவைகள்
தனியார் நிறுவனத்தின் நான்குபேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகின்றது.
எம்மிடம் Kit காட் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு
RAINBOW TRAVELS & TOURS
32 1/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 3237,
0115371629, 0777535988(கொழும்பு)


## மூன்று தினங்களில் ஆறு இளைஞர்கள் காணாமற் போயுள்ளனர்

யாழ்ப்பாணம்,டிசெ.28

கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமைவரை 6 இளைஞர்கள் காணாமற்போயுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பாளர் தெரிவித்தார்.

மாவடி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கந்தையா லதீஸ்வரன் (வயது 23) என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை காணாமற்போயுள்ளார். கலட்டியில் உள்ள தனியார் கல்வி நிலையத்திற்குச் சென்ற இவர் வீடு திரும்பவில்லை என உறவினர் ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறை மேற்கைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை அனேந்திரன் (வயது 31) என்பவர் என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை காணாமற் போயுள்ளார். கடைக்குச் சென்றவர் வீடு திரும்பவில்லை என உறவினர் முறையிட்டுள்ளனர்.

அதே தினத்தில் விஜயதாஸ் அரவிந்தன் (வயது 17) என்பவரும் கடைக்குச் சென்ற இடத்தில் காணாமல் போயுள்ளார்.

மதவடி முகாம் சுன்னாகத்தைச் சேர்ந்த இராசேந்திரன் இராஜேஸ்வரன் கடந்த ஞாயிற்றுக்கிழமை காணாமல் போயுள்ளார் என முறையிடப்பட்டுள்ளது. பொலிகண்டி, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சுப்பிரமணியம் புஸ்பதீபன் (வயது 25) என்பவர் தனது மாமனாருடன் கடந்த சனிக்கிழமை ஆலயம் ஒன்றைத் துப்புரவு செய்யச் சென்றவேளை காணாமற்போயுள்ளார். துப்புரவுப் பணியை முடித்துக்கொண்டு வீடு திரும்பும் போதே இவர் காணாமற் போனதாக முறையிடப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த அப்பாத்துரை நிசாந் (வயது 22) என்பவர் வீட்டிலிருந்து கோவிலுக்குச் சென்ற வேளை உடுப்பிட்டி இராணுவ முகாமுக்கு அண்மையில் காணாமல் போனதாக உறவினர்களால் முறையிடப்பட்டுள்ளது.

(202-88-79)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2006ஆம் ஆண்டு நடைபெற்ற 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த லிதன் - சதீஸ்வரி தம்பதியரின் செல்வப் புதல்வி

**லக்சனா**

(யா/கோட்டைக்காடு அ.த.க. பாடசாலை)

இவரைப் பாராட்டி வாழ்த்துவோர்
அம்மம்மா தேவநாயகி,
மாமாமார்: பிரபாகரன், நிருபாகரன், சித்தி: மைதிலி

சூராவத்தை வடக்கு,
சுன்னாகம்.


## COMPUTERIZED ACCOUNTING

சர்வதேச ரீதியில் பிரசித்தி பெற்ற கணினி மென்பொருட்களை பயன்படுத்தி நிறுவனங்களின் கணக்கியல் நடவடிக்கைகளை கணினி மயப்படுத்த உங்களாலும் முடியும். 06 வாரங்களில் நீங்களும் ஓர் கணினியியல் கணக்கியலாளராகுங்கள்!

Tally

முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும் | Only in 30 hours | Start on Saturday 30.12.2006 02.30 p.m.

TO Whom:
- School leavers
- Students of technical college & Advanced Technical Institutes (ATI)
- Students members of AAT, IAB, CMA, CIMA, Charted(SL) & ACCA
- Under graduates of universities
- Employees of private companies, Banks, Government institutions
- Those who search jobs
- Those who are interesting in Accounting packages

ஏன் நீங்கள் எங்களுடன் இணைந்துகொள்ள வேண்டும்!
- முழுமுழுதாக செய்முறை பயிற்சியை கொண்டது - (No theory Classes)
- பயிற்சிக்கான மிகக்குறைந்த கட்டணம், வசதிக்கேற்ப பயிற்சி நேரத்தை ஒழுங்குசெய்யமுடியும்.
- பயிற்சி முடிவில் தகைமைச்சான்றிதழ் வழங்கப்படும்.

விரைந்திடுங்கள்!

கணக்கியல் அறிவிலாதவர்களும் இணைந்து பயிற்சி பெற முடியும். பயிற்சிகள் யாவும் Qualified & Experienced Lecturers மற்றும் Banking Professionals ஆல் நடாத்தப்படும்.

**CB Computer Academy**
T.P No.021-4590291 Station Road, Kondavil.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையில்
கல்வி கற்று தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2006 இல்
சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டுகின்றோம்
மேலும் கல்வியில் உயர் நிலைபெற வாழ்த்துகின்றோம்

| | பெயர் | புள்ளி | | பெயர் | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 01. | S.அனோஜா | 161 | 12. | T.நிசாருஜா | 138 |
| 02. | M.கீர்த்தனா | 157 | 13. | T.தனேந்திரன் | 138 |
| 03. | K.அபிரா | 152 | 14. | C.சங்கவி | 137 |
| 04. | Y.சயந்தன் | 152 | 15. | A.கோபினி | 136 |
| 05. | V.சத்யபிரியன் | 151 | 16. | P.நிருசன் | 135 |
| 06. | S.தனுசன் | 149 | 17. | S.விதுர்ஷா | 134 |
| 07. | K.துசானி | 148 | 18. | R.சகானா | 133 |
| 08. | K.சாய்ரூபன் | 147 | 19. | N.கிருபரன் | 133 |
| 09. | P.மயூரிகா | 146 | 20. | N.துசானி | 133 |
| 10. | N.ராஜமனோகரி | 142 | 21. | E.துசாரா | 133 |
| 11. | S.சிந்துஜன் | 140 | 22. | T.காயத்திரி | 133 |

இவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு இவர்கள் இந்த உயரிய பெறுபேற்றை நல்க உந்து சக்தியாக விளங்கிய பாடசாலை அதிபர் திரு I.நடராஜா அவர்களையும் தரம் 1-5 வரை கல்வி கற்பித்த ஆசிரியர்களையும் தரம் 5இல் விசேடமாக கல்வி கற்பித்த ஆசிரியர்களையும் வாழ்வு சிறக்க வளம் கொழிக்க நிறைந்த மனதுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.


யா/நெல்லியடி மெதடிஸ் மிசன் தமிழ்கலவன் பாடசாலை
கரவெட்டி. (சி-51667) பெற்றோர், பாடசாலைச் சமூகம்.

## என்றென்றும் நீங்காத நினைவில்.......

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு | தோற்றம் | மறைவு |
|---|---|---|---|
| 30 | 20 | 12 | 19 |
| 04 | 12 | 07 | 10 |
| 1934 | 2004 | 1954 | 1987 |



அமரர்
சொக்கலிங்கம் துரைஐயா

அமரர்
துரைஐயா பாலச்சந்திரன்

(கமலாஸ் ஸ்ரோர்ஸ், சந்திரன் பான்சிபலஸ் உரிமையாளர்கள்)
திதி: 28.12.2006

குடும்பத்தின் குலவிளக்காய் பாசதின் உறவிடமாய் எம் வாழ்வை இனிதாக்கி எமக்குக் குறைவில்லாது நல்வழி காட்டிய தெய்வங்களே எத்தனை நூறு ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு அகலாது.

து.பிரேமச்சந்திரன்,
கமலா ஸ்ரோர்ஸ்,
நாவலர் வீதி,ஆனைக்கோட்டை. (65063)

குடும்பத்தினர்
சங்கரப்பிள்ளை வீதி ஆனைக்கோட்டை.


## புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!

**COMPUTER EXPRESS** 80% Off

O/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான விசேட பிரிவுகளுடன்

மாணவர்களின் நலன்கருதி எமது கிளை நிறுவனத்தினை இல 167,கஸ்தூரியார் வீதியில் (உதயன் பணிமனை அருகில்) ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அனைத்துக் கற்கைநெறிகளிற்கும் 80% கட்டணக் கழிவு வழங்குவதில் பெருமையடைகின்றோம்.

| Course | Duration | Old price | New price |
|---|---|---|---|
| Diploma in Computer Science | 4 மாதம் | 8,250 | 1,650 |
| Honours Diploma in Computer Science | 5 மாதம் | 10,500 | 2,100 |
| Diploma In WebPage Designing | 4 மாதம் | 8,250 | 1,650 |
| Diploma in Graphic Designing | 4 மாதம் | 8,250 | 1,650 |
| Diploma In Desktop Publishing | 4 மாதம் | 7,250 | 1,450 |
| Diploma in Hardware Engineering | 3 மாதம் | 7,250 | 1,450 |
| Diploma in AutoCAD | 3 மாதம் | 7,250 | 1,450 |
| Accounting Package | 3 மாதம் | 8,250 | 1,650 |
| MS Office | 3 மாதம் | | 1000 |

Advances Courses 50% Off
Diploma in Multimedia ~~5500~~ 2750
Diploma in Video Editing ~~6500~~ 3250

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

Start on: Batch I - 29/12/2006 ,Batch II :- 30/12/2006 , Batch III :- 31/12/2006 , Batch IV :- 03/01/2007

Jaffna Head office
No 15, Sirambiyadi Lane. (off Stanly Rd.) 021-222 8250, 077 222422

Branch office
No 167, Kasthuriyar Rd, (Near Uthayan Publication) Jaffna

வகுப்புக்கள் அனைத்தும் எமது கிளை நிறுவனத்திலேயே நடைபெறும். அனுமதிகளை தலைமையகத்திலும் கிளை நிறுவனத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்ணக வாழ்வின் ஈராண்டு நிறைவுகள்

**மலராக**
25 - 06 - 1955



**சருகாக**
19 - 12 - 2004

### அமரர் கிட்டிண்ணன் தர்மலிங்கம் (ஆசிரியர்)

*(யா/ ஞானாசாரியர் கல்லூரி)*

ஈராண்டு காலமதில் - எங்கள்
பாசக்கூடு உடைந்து போனதப்பா!
வேசக் கோடு கடந்து வந்தானோ காலனவன்?
உங்களால் உயிர் தரித்த நாம் - இங்கு
உயிரில்லா வெற்றுடலாய் துடிக்கின்றோம் - எம்
இதயமது இயங்கவில்லை அப்பா
இனியும் நாம் உங்களைக் காண்போமா?
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

*முடக்காடு, நெல்லியடி கிழக்கு,*
*கரவெட்டி.*

(65123)

**உங்கள் பிரிவால் துயருறும்:**
**குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

**தோற்றம்**
02 - 10 - 1918



**மறைவு**
28 - 11 - 2006

### அமரர் அருணி சபாபதி ஐயாத்துரை

(ஓய்வுபெற்ற ஆசிரியர், மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை)

28.11.2006 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில்கலந்தும் கண்ணீர் அஞ்சலிகள் அனுதாபச் செய்திகளை பத்திரிகைகளிலும் தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் தெரிவித்தும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று 28.12.2006 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*மானிப்பாய் வடகிழக்கு,*
*மானிப்பாய்.*

(65143)

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**



## சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் வருடாந்த திருவாசக விழா - 2006



காலம் : நாளை (29.12.2006) வெள்ளிக்கிழமை
காலை 10 மணி
இடம் : சந்நிதியான் ஆச்சிரமம்
அருளுரை : நல்லை ஆதின குரு முதல்வர்
வாழ்த்துரை : Dr. சி. கதிரைவேற்பிள்ளை
சிறப்புச் சொற்பொழிவு : ஆ. சிவநாதன்
அதிபர்,
வல்வை சிவகுரு வித்தியாசாலை.

வாராந்த நிகழ்வு வரிசையில்
ஞானச்சுடர் 108ஆவது மார்கழி மாத மலர்

வெளியீட்டுரை : S.தேவதாசன் J.P.
மதிப்புரை : ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
அதிபர்,
கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை.

குறிப்பு: ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நாயன்மார்களின் திருவுருவப் படங்களும், திருவாசக ஏடுகளும் ஆச்சிரமத்திற்கு ஊர்வலமாக எடுத்து வரப்படும்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.**

சந்நிதியான் ஆச்சிரமம்,
செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.

(#51662)

*பேரவை.*

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் - யாழ். கிளை - வலிகாமம் மேற்கு பிரிவு (சங்கானை)

இப்பிரிவில் புற்றுநோயினால் பீடிக்கப்பட்டு வறுமைக்கோட் டில் வாழ்பவர்களை இனங்கண்டு உதவி செய்வதற்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு குறித்த தினமாகிய 2006/12/25 ஆம் திகதியன்று நடத்தப்பட்ட, முடிவுகள் பின்வருமாறு,

| 01ஆம் பரிசு | 02ஆம் பரிசு | 03ஆம் பரிசு |
|---|---|---|
| 12387 | 12165 | 5043 |

ஏனைய பத்து ஆறுதல் பரிசுகள்:-
சீட்டு இல: 6513, 5293, 5239, 13926, 5589,
14445, 3418, 2601, 7537, 4626

***பரிசுகளைப் பிரிவுக் காரியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் பி.ப. 3 மணி - 5மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.***
***பரிசுகளைப் பெறுவதற்கான இறுதித் திகதி 28/01/2007***
***ஆதரவிற்கு நன்றி.***

*கௌரவ செயலாளர்.* (65101)

தெல்லிப்பழை வீதி,
வட்டுக்கோட்டை. 2006.12.26


## சிறு விமான சேவை

**யாழ். - கொழும்பு விமான சேவைகள்**
*தனியார் நிறுவனத்தின் நான்குபேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகின்றது.*
*உடனடிப் பயணம்.*
தொடர்பு:- தொ.பே.: 0112721789,
0114964994, 0785788811,
0785325501


## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் பரமசாமி
### (சின்னத்தம்பி)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் பரமசாமி 25.12.2006 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி நாகலிங்கம் தம்பதியரின் அன்பு மகனும் நாகலிங்கம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் மனோன்மணியின் பாசமிகு கணவரும் கிருஷ்ணராணி, புவனேந்திரன், வேதகலா, நகுலேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற துரைராசசிங்கம் மற்றும் மனோகரன், ஜீவலதா, சீதா ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2006) வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

### செல்வி மேசி செல்வராணி
### (தென் இந்திய திருச்சபை)

ஏழாலை வடக்கை சேர்ந்த செல்வி மேசி செல்வராணி (செல்லா) நேற்று (27.12.2006) கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பெஞ்சமின் செல்வரட்ணம் மற்றும் திருமதி றோஸ் செபரத்தினம் தம்பதியின் (இளைப்பாறிய ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மகளும் கோபீன் (குவைத்) தேவஜெயந்தி (ஆஸ்திரிலியா), செல்வச்சந்திரன் (பண்டாரவளை), பத்மினி (ஆஸ்திரேலியா), ஜெபச்செல்வன் (கனடா), ஜோதினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் செனிற்றா, குகானந்தம், சாந்தகுமார், கிறிஸ்ரீன், பிரேம்நாத் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏழாலை வடக்கு,*
*ஏழாலை.*

தகவல்:
**அ.தவபிரகாசம்**
**(மாமன்)**

### திருமதி இரத்தினசபாபதி அன்னம்

தாமர் ஒழுங்கை, புலோலி வடக்கு, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினசபாபதி அன்னம் 26.12.2006 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் இரத்தினசபாபதியின் மனைவியும் காலஞ்சென்ற திரு. திருமதி பொன்னையாவின் மகளும் நவரத்தினம் (தையல் ஆசிரியை - கொழும்பு), சிவரத்தினம் ஆகியோரின் தாயும் செல்வராசாவின் (கொழும்பு) மாமியும், பிரபாகரன் (கணனி விரிவுரையாளர் - கொழும்பு), கிருபாகரன் (கணனி விரிவுரையாளர் - கொழும்பு), ரோகினி (விஞ்ஞானதுறை மாணவி - கொழும்பு) ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 27.12.2006 புதன்கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புலோலி வடக்கு,*
*பருத்தித்துறை*

தகவல்:
**திருமதி ந. செல்வராசா**
**(மகள் - தையல் ஆசிரியை)**

### திருமதி கிரேஸ் சுகிர்தம்மா மான்
### (MANN)



உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிரேஸ் சுகிர்தம்மா மான் நேற்று (27.12.2006) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நிச்சேட் அரசரட்ணம் மானின் அன்பு மனைவியும் ரவீந்திரன் (கொழும்பு), மகேந்திரன், மனோகரி (சுதுமலை), தயாகரி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயுமாவார். அன்னாரின் நல்லடக்கம் 28.12.2006 கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*129B, வைத்தியாறோட்,*
*தெஹிவளை*
*தொ.பே. இல. 0112 731968.*

தகவல்:
**M.Mann**
([illegible] - மகள் பெற்றோல் நிலையம் அருகில் உரும்பிராய்).


# IIS COMPUTER COURSES

**விசேட சலுகைக் கட்டணத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பம்**

| பிரிவு 1 | பிரிவு 2 | பிரிவு 3 | பிரிவு 4 |
|---|---|---|---|
| 05.01.2007 | 06.01.2007 | 21.01.2007 | 22.01.2007 |

**DIPLOMA COURSES :**
- Dip. in Microsoft Office
- Dip. in Internet Technology
- Dip. in Computer Programming
- Dip. in Hardware Technology
- Dip. in Desk Top Publishing

**CERITIFICATE COURSES :**

| | |
|---|---|
| MS Word | Flash MX |
| MS Excel | HTML |
| MS Access | Visual Basic |
| MS Power Point | Visual C |
| Adobe Photoshop | Java |
| Adobe PageMaker | Corel DRAW |

கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக
கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்

**Institute of Informatics Studies**
**# 100, Clock Tower Road, Jaffna.**
**T.P. : 021 222 2831**


## மரண அறிவித்தல்கள்

### ஏரம்பு அன்னம்மா



உடுவிலைப் பிறப்பிடமாகவும் சங்குவேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஏரம்பு அன்னம்மா நேற்று (27.12.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஏரம்புவின் அன்பு மனைவியும் பாலசுப்பிரமணியம் (முன்னாள் ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை இலிகிதர்), கந்தசாமி, மனோன்மணி, நேசமணி, காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் (முன்னாள் உள்நாட்டு இறைவரித் திணைக்களம்), தவமணி திலகமணி, பிறேமா ஆகியோரின் அன்பு தாயும் சிவசோதி, பூபதி (முன்னாள் யாழ். போதனா வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்), பஞ்சரட்ணம் காலஞ்சென்றவர்களான முருகேசு, ஸ்ரீகுமாரி, ஏகாம்பரநாதன் மற்றும் சற்குணநாதன் ஆகியோரின் அன்பு மாமியும் பாலகிருஷ்ணதேவி, உதயகுமார் (கமத்தொழில் இலாகா திருநெல்வேலி), தேனுகாதேவி, விக்கினகுமார் (மாவட்ட தொழில் திணைக்களம் யாழ்ப்பாணம்), ரதிதேவி, சாந்தகுமாரன், சதீஸ்குமாரி, விஜயகுமாரி (சட்டத்தரணி -இலிகிதர்), இராதாகிருஷ்ணன் (கொலன்ட்), சாந்தினி (லண்டன்), தயாநிதி (ஜேர்மனி), மதிவண்ணன், யாழினி, புருசோத்தமன், சந்தனகுமார், செந்தில்குமார் (ஆசிரியர் கிளிநொச்சி மகாவித்தியாலயம்), காலஞ்சென்ற ஸ்ரீ பாமினி மற்றும் கிருஷ்ணாந்தினி, முரளிதாஷன், தயாளன், யதுர்சன், அஞ்சலோ ரவி, சயந்தா, அனுஷா (கனடா), அச்சனா ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2006) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவஞானப்பிள்ளையார் கோயிலடி,*
*சங்குவேலி வடக்கு,*
*மானிப்பாய்.*

(65148)

தகவல்:
**ஏ.கந்தசாமி (மகன்),**
**மற்றும் பிள்ளைகள்,**
**பேரப்பிள்ளைகள்.**

### கனகசபை நடராசா பத்தர்



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் முருக பத்தருமாகிய கனகசபை நடராசா பத்தர் 22.12.2006 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - வாலையாச்சி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற சிவராமலிங்கம் அவர்களின் அருமைச் சகோதரரும் திரவியலட்சுமி, தருமகிருஸ்ணர் (ஓய்வுபெற்ற தொழிலுட்பவியலாளர் - மட்டக்களப்பு), யோகேஸ்வரி, சரோஜா (திருமலை), தேவராணி ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்றவர்களான நடேசன் ஆச்சாரி, இந்திராதேவி, ஆனந்தசுந்தரம் மற்றும் தங்கவேல் (ஓய்வுபெற்ற அதிபர்), செல்வராஜா (அரச முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பக் கல்லூரி - யாழ்ப்பாணம்), ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் மைத்துனரும், வசந்தகோகிலம், விமலாதேவி, ஜெயவதனி ஆகியோரின் பெரிய தகனப்பனும் சண்முகசுந்தரம், மச்சேந்திரகுமார், கரிஹரன் ஆகியோரின் பெரிய மாமனும் தர்மபாலா, சாந்தினி, சாந்தி கண்ணன், தர்சினி அனந்தன், கிருஸ்ணராஜா ராதிகா, மங்களநாயகி தியாகராஜா, ஷேதநாயகி மெய்யழகன், தேவநாயகி மனோகரன், மிகிராணன், சுகுணராஜா, தாரணி யெஜேந்திரன், யாழினி, பிரசாத், திருச்செல்வி, Dr.துஸ்யந்தன், திருமலர் கிரு பாகரன், திருக்குமரன், திருவேணி, பிரியங்கா, தனுஷன் ஆகியோரின் அன்பு பேரனும் பிரணீத்தா, பிரணவன், அஷ்சயன், அபிஷேக், சுகந்தனா, தவலக்ஷன், பிரியந்தனா, பவித்திரா, ஜனகன், அஞ்சலா, லக்ஸ்மன், ஜனுஜா, பிரனுஜா, வைஸ்ணவி, பிரசாந்தன், பிரசன்னன், கிரசினி ஆகியோரின் பூட்டனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2006) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தக னக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*மருதமூர்த்தி கோயிலடி,*
*கருவேலடி ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

(65122)

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

# பாவம், இலங்கைப் பொதுசனங்கள்!

ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், சபாநாயகர், எதிர்க் கட்சித் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் சம்பளங்கள் அடுத்த மாதம் தொடக்கம் உயர்த்தப்பட உள்ளன. உயர்த்தப்பட உள்ள சம்பள வீதங்களை அறியும் போது சாதாரண பொதுமக்கள் தலை சுற்றிக் கீழே விழுந்து விடும் நிலை.

ஜனாதிபதியின் சம்பளம் 300%; அமைச்சர்களின் சம்பளம் 210%; நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம் 165%. இந்த உயர் கணக்கில் நெடிதுயர்ந்து செல்கிறது. மக்கள் பிரதிநிதிகளின் 'ஊதியம்'!

இந்த 'எக்கச்சக்கமான' சம்பள உயர்வுகளுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுவிட்டது.

இதுவரை காலமும், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஆகக்குறைந்தது ஐந்து வருடங்கள் பதவி வகித்தால் மட்டுமே ஓய்வூதியம் பெறத் தகுதி உடையவர் என்ற விதி உண்டு.

ஆனால், இப்போது அதிலும் ஒரு திருத்தம் கொண்டு வருவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகி, சத்தியப் பிரமாணம் செய்துகொண்டால் போதும். அன்று தொடக்கம் ஓய்வூதியம் பெறுவதற்கு அவரை அருகதை உடையவர் ஆக்குவதே உத்தேச திருத்தத்தின் நோக்கம்.

ஜனாதிபதி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் மக்களால் தெரிவுசெய்யப்படுபவர்கள். அதன் பின்னர் மக்களுக்குச் சேவை செய்வதற்காக அமைச்சர், பிரதி அமைச்சர் பதவிகளை ஏற்றுக்கொள்கிறார்கள்.

அவர்கள் உணவுப் பொருள்கள் உட்பட ஏனைய பாவனைப் பொருள்களைக் கொள்முதல் செய்வதற்கு மானிய விலைகள் என்ற சலுகை எதுவும் இல்லை என்பது உண்மையே. இங்கே அவர்கள் பொதுமக்களுக்குச் சமமாக மதிக்கப்படுகிறார்கள் என்பது ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதே.

ஆனால், அவர்கள் வரிச்சலுகைகளுடன் வாகனங்களை இறக்குமதி செய்ய வசதி உண்டு. அவற்றுக்குத் தேவையான எரிபொருள்கள், அவற்றைச் செலுத்தும் சாரதிகள் மற்றும் சிற்றூழியர்களின் கொடுப்பனவுகள் என்பன மக்கள் செலுத்தும் வரிப்பணத்தில் இருந்தே கறக்கப்படுகின்றன! இவ்வாறு இன்னும் எத்தனையோ விசேட சலுகைகள்.

நாட்டின் பொருளாதாரம் உறுதியான நிலையில் உள்ளதாகக் கூறப்படுகிறது;. அது உண்மை என்று காட்டிக் கொள்வதற்காக 'சரிசெய்யும்' கணக்குகளும் காட்டப்படுகின்றன.

- ஆனால், உண்மை நிலை அதுவல்ல என்று பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். இதுவே, சரியென்று ருசுப்படுத்தும் விதத்தில், மக்களின் வாழ்க்கைச் செலவு எட்டிப் பிடிக்க முடியாத அளவுக்கு நாளாந்தம் உயர்ந்து உயர்ந்து செல்கிறது. அதனைக் கொண்டே நாட்டின் பொருளாதாரம் - பொருளாதார வளர்ச்சி - கீழ்முகமாக இறங்கிச் செல்கிறது என்பதனை எவரும் புரிந்துகொள்ளலாம்.

இதற்கு மேலதிகமாக விளக்கமும் வியாக்கியானமும் நிபுணத்துவமும் தேவை என்பதல்ல. இத்தகையதோர் பின்புலத்தில், பொருள்களின் விலைகளைக் குறைத்து மக்களின் வாழ்க்கைச் செலவுச் சுமையைக் குறைக்க எந்த மார்க்கமும் அரசுக்கு இல்லை என்பதனை எவரும் மறைக்க முடியாது.

உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிப்பதன் மூலமும், அவற்றை ஏற்றுமதிசெய்து வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதிப்பதன் மூலமுமே வாழ்க்கைச் செலவைக் குறைக்க வாய்ப்பு உண்டாகும்.

இது விடயத்திலும், பதவிக்கு வந்த அத்தனை அரசுகளும் தோல்வியே கண்டன. நாட்டின் வரவையும் செலவையும் சமன்செய்து நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லப்போவதாக வாய் வேதாந்தம் பேசிக் கொண்டு ஆட்சியைக் கைப்பற்றுவது எல்லா அரசியல் கட்சிகளுக்கும், தலைவர்களுக்கும் கைவந்த கலை.

ஆனால், பொருளாதார நிலையில் மக்களை அதள பாதாளத்துக்குள் தள்ளிவிட்டு - அவர்களின் முதுகுகள் மீது அடுத்தடுத்துக் கனம் நிறைந்த பாரப்பொதிகளை ஏற்றி எலும்புகளை உடைத்துவிடுவதே - கடந்த பல தசாப்தங்களாக நடைபெற்றுவரும் 'சீரிய நடைமுறை'! அல்லலுறும் மக்களின் எல்லையில்லா அனுபவமும் அதுவே!

இந்த இலட்சணத்தில் நாட்டின் பாதுகாப்புச் செலவை 47 சதவீதத்தால் அதிகரித்து மேலும் நிலைமையை மோசமாக்கி உள்ளது மஹிந்த அரசு. மக்களில் மிகப் பெரும்பாலானவர்கள் சமாதானத்தையே விரும்பினாலும், அரசாங்கம் யுத்தத்தை நாடி, கோடான கோடிக் கணக்கில் பணத்தைச் செலவிட்டுக் கரியாக்குவதற்கு கங்கணம் கட்டி நிற்கிறது. முழு அளவிலான போருக்கு முஸ்தீபு செய்துவருகிறது.

நாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கைச் சுமையை நினைத்த நினைத்தவாறு, திடீர் திடீரென, அனேகமாக நாளாந்தம், அவர்கள் தாங்க முடியாதவாறு, ஒடிந்துவிடும் வகையில் அதிகரித்துக்கொண்டு -

அரசியல் தலைவர்களின் சம்பளங்களை உயர்த்துவதற்கு முடிவு செய்திருப்பது மக்களுக்குச் செய்யும் மாபெரும் துரோகமாகும்.

இதனைச் சற்றேனும் மனிதாபிமான உணர்வுடன் நோக்கும் பண்பும் பழக்கமும் இந்த நாட்டு அரசியல்வாதிகளுக்கு இல்லை என்பதனை மக்கள் அறிந்திருந்து என்ன? திக்கற்றவர்கள் அவர்கள்!

நாடு சுபீட்சம் பெற்று, திருப்தியாக உண்டு, உடுத்து சராசரி வாழ்க்கையையேனும் நடத்தும் நிலை வராதா என்று இந்நாட்டு மக்கள், இப்போது ஏங்கிப் பயனில்லை.

உணவை அகப்பையில் அள்ளி வைத்திருக்கும் அரசியல்வாதிகள், தலைவர்கள் தமக்குள் அதனைப் பங்கு போட்டுக் கொள்கிறார்கள். மக்கள் அவர்களைத் தெரிவு செய்த பாவத்திற்காக நாவறண்டு ஏதிலிகளாக வேண்டியது தானா?

அரசியல் தலைவர்கள் மட்டுமே மனிதர்கள், மக்கள் அந்த வகை சாராதாவர்கள் என்ற எண்ணத்துடன் ஏமாற்றும் போக்குடன் நடமாடும் நிலை மாறும் வரை இந்த நாட்டில் பொதுசனத்துக்கு மீட்சியே இல்லை.

பொதுமக்களின் வாக்குகளுக்கு மன்றாடி அவற்றைப் பெற்று அரசியல் தலைவர்களாக வருவோர், ஏறிவந்த ஏணியை எட்டி உதைத்துவிடும் விதத்தில் செயற்படுவது தொடரும் வரை இந்த நாடு முன்னேறமாட்டாது நிச்சயம்.

தேர்தல் காலத்தில் இதனை பொதுமக்கள் உணர்ந்து நடந்தாலும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே 'அரசர்களாக' ஆட்சி யில் அமர்வார்கள்.

பாவம், இலங்கை நாட்டின் பொதுசனங்கள்!

# அமைச்சர்கள், எம்.பிக்களின் ஊதிய உயர்வை ஆட்சேபித்து நீதிமன்றத்தில் மனுத் தாக்கலாகும்

கொழும்பு, டிசெ.28

ஜனாதிபதி, பிரதம மந்திரி, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களது உத்தியோகத்தர்களுக்குப் பெருமளவு சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளதை எதிர்த்து அரச துறை சம்பள மீளாய்வுத் தொழிலாளர் சங்க ஒன்றியம் உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்யத் தயாராகி வருகிறது. எம்.பிக்களின் மாதாந்த சம்பளம் 20 ஆயி ரம் ரூபாவிலிருந்து 54 ஆயிரம் ரூபாவாக அதாவது 165 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்களின் சம்பளம் 31, 800 ரூபாவிலிருந்து 97 ஆயிரம் ரூபாவாக - 210 சதவீதத்தாலும், ஜனாதிபதியின் சம்பளம் 25 ஆயிரம் ரூபாவிலிருந்து 97 ஆயிரம் ரூபா வாக 300 சதவீதத்தாலும் அதிகரிக்கப்படுமென சமீபத்தில் அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இந்தப் புதிய சம்பளம் 2006 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வருமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

அரச ஊழியர்கள் 6 சதவீதம் முதல 15சவீதம்வரையிலானசம்பள உயர்வையே பெற்றுள்ளார்கள். அரச ஊழியர்கள் 20 வருடங்கள் சேவையாற்றிய பின்னரே ஓய்வூதியம் பெறும் தகுதியைப் பெறுகின்றனர். ஆனால், அமைச்சர்களின் தனிப்பட்ட அலுவலக உழியர்கள் 5 வருடம் சேவையாற்றினால் ஓய்வூ தியம் பெறும் தகுதியைப் பெறும் வகையில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதேவேளை -

அரச ஊழியர்கள் வாழ்க்கைச் செலவுக்கென வழங்கப்பட்டு வந்த 1,100 ரூபா, யுத்தச் செலவைக் காரணம் காட்டி 375 ரூபாவாகக் குறைக் கப்பட்டுள்ளது.

அமைச்சர்கள், எம்.பிக்களுக்கு ஒரேயடியாகப் பெருமளவு சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டிருப்பது பாதுகாப்புச் செலவீனங்களைப் பாதிக்காதா எனவும் தொழிலாளர் சங்க ஒன்றியம் கேள்வி எழுப்பியுள்ளது. (ஐ)

## சாதாரண பரீட்சை விடைத்தாள் கொழும்புக்கு அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.28

நடைபெற்று முடிந்த ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்கள் முழுமையாகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கல்வித் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இரண்டு கட்டங்களாக இந்த விடைத்தாள்கள் விமானம் மூலம் பாதுகாப்பாகக் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக அவர் கூறினார்.

விடைத்தாள்கள் கொழும்புக்குக் கொண்டு செல்வதற்கென பாதுகாப்பாகப் பொதி செய்யப்பட்டு அவை விமானம் மூலம் கொண்டு செல்வதற்கென கடந்த செவ்வாய்க்கிழமை உரிய தரப்பிடம் கையளிக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (1)

## சம்பூரில் அவசர அவசரமாக மின் நிலையம்; அரசின் செயலை கண்டிக்கிறது கூட்டமைப்பு

சம்பூரில் அவசர அவசரமாக அனல் மின்நிலையத்தை நிறுவ அரசு மேற்கொண்டுவரும் முயற்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

திருகோணமலை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களுடன் கலந்தாலோசிக்காமல் அரசு எடுத்திருக்கும் இத்தீர்மானம் பிழையானது என்றும் தமிழ்ப் பிரதேசங்களை ஆக்கிரமிப்பதற்காகவே அரசு இவ்வாறு செயற்படுகிறது என்றும் கூட்டமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட எம்.பி. துரைரட்ணசிங்கம் நேற்று உதயனுக்குக் கருத்துக் கூறுகையில்,

"11 ஆயிரம் தமிழ் மக்கள் வாழ்ந்த இடம் சம்பூர். அந்த மக்களைத் திட்டமிட்டு விரட்டி விட்டு அந்த இடத்தை அரசு ஆக்கிரமித்துள்ளது.

விரட்டப்பட்ட மக்கள் இப்போது அகதி முகாம்களில் சீரழிந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் மீண்டும் சம்பூரில் வந்து குடியேறாத வாறு அரசு நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறது.

அதற்காகவே அவசர அவசரமாக அங்கு அனல் மின் நிலையத்தை நிர்மாணிக்க அரசு தீர்மானித்துள்ளது. அரசு பொருத்தமில்லாத நேரத்தில் இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்கிறது.

இத்திட்டத்தைத் தொடங்குவதற்கு முன் அரசு எம்மிடம் கலந்தோ சித்திருக்க வேண்டும். ஆனால், அப்படிச் செய்யவில்லை. காயப்பட்ட தமிழ் மக்களின் துயரை ஆற்று வதற்குப் பதிலாக அவர்களை மேலும் மேலும் காயப்படுத்தவே அரசு முனைகிறது.

அரசின் இத்திட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவது பற்றி அரசு உடனடியாக மீள் பரிசோதனை செய்ய வேண்டும்." - என்றார். (ஐ-07)

## மண்எண்ணெய் விநியோகம்

அரியாலை, டிசெ.28

புத்தாண்டை முன்னிட்டு முற்றவெளிப்பகுதியில் உள்ள யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையத்தில் இம்மாதத்திற்கான இரண்டாம் கட்டமாக மேலும் இரண்டு லீற்றர் மண் எண்ணெய் இன்று வியாழக்கிழமை தொடக்கம் விநியோகிக்கப்படும் என்று சங்கத்தலைவர் எஸ்.ரி.கணநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ். பிரதேச செயலர் பிரிவில் ஜே/68, 69, 71, 72, 73, 81, 83 ஆகிய கிராம சேவையாளர் பிரிவு மக்களுக்கு பங்கீட்டு அட்டைக்கு விநியோகிக்கப்படும். (1-17)

## சித்தி எய்திய மேலும் சில மாணவர்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.28

குடாநாட்டில் நடத்தப்பட்ட 5ஆம் தர விசேட புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மேலும் சில பாடசாலை மாணவர்களின் முடிவுகள் வருமாறு:-

***வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலை*** - ம.சங்கவி (153), பு.மனோஞானி (146).

***வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி*** - க.அபர்ணா (147).

***மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்*** - தி.விரதசாரணி (138), சு.சிவோதயன் (137), ச.தயாபரன் (136).

***சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி*** - த.தேவதர்சினி (173), சி.லக்சனா (167), இ.லாவண்யா (136), ச.சிந்துஜா (135).

***ஆனைப்பந்தி மெ.மி.வித்தி.*** - இ.குணாளன் (154), க.துவாரகன் (150), த.துவாரகன் (146), இ.நிவேதா (145), சி.அஞ்சலா (142), சி.கார்த்திக் (138), கி.விதுரன் (138), சி.தனுஷன் (136), ஜெ.ஜெயப்பிரியன் (135), உ.சஜிலஜன் (135).

## யாழ்ப்பாணத்தில் ச.தோ.ச. கிளையை மீளத்திறக்க அரச அதிபருக்கு டக்ளஸ் பணிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ். நகரில் ச.தொ.ச. வர்த்தக நிலையத்தை இம்மாத இறுதிக்குள் திறப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். அரச அதிபருக்குப் பணிபபுரை வழங்கியுள்ளார் என அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் குறிப்பில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டில் ச.தொ.ச. வர்த்தக நிலையங்களில் பணியாற்றி வந்துள்ள ஊழியர்கள் அமைச்சரை அமைச்சரது யாழ். அலுவலகத்தில் நேற்று சந்தித்துக் கலந்துரையாடியதன் பின்னர் மேற்படி நடவடிக்கையை உடன் எடுத்துள்ள அமைச்சர் ச.தொ.ச வர்த்தக நிலையத்தை இம்மாத இறுதிக்குள் திறக்க நடவடிக்கை எடுக்கும்படி மேற்படி பணிப்புரையை விடுத்துள்ளார்.

இதன் பிரகாரம் யாழ். நகரில் ச.தொ.ச. நிறுவனம் முன்னர் இயங்கி வந்த வின்சர் தியேட்டர் கட்டடத்தில் மேற்படி வர்த்தக நிலையம் மீள இயங்கவுள்ளதுடன் நாளை முதல் அக்கட்டடத் திருத்தப் பணிகள் உடன் ஆரம்பிக்கப் படவுள்ளன.

தற்போது பணி இழந்துள்ள நிலையில் உள்ள ச.தொ.ச. பணியாளர்களுக்கு மீளப் பணிகளை வழங்கும் நோக்கத்துடனும் குடாநாட்டு மக்களின் தற்போதைய நிலைமைகளைக் கருத்திற்கொண்டும் ச.தொ.ச. வர்த்தக நிலையம் மீண்டும் யாழ். நகரில் ஆரம்பிக்கப்படுவதுடன் குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் கூடிய விரைவில் மேற்படி வர்த்தக நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும் - என்றுள்ளது.

## நாளை

மார்கழி 14

வெள்ளிக்கிழமை

29.12.2006

திதி : தசமி

பின்னிரவு 03.16

நட்சத்திரம் : அச்சுவினி

பின்னிரவு 02.12

சுபநேரம் : 06.28 - 07.58

ராகுகாலம் : 10.58 - 12.28

## வாசகர் திருமுகம்

### கற்றல் உபகரணங்களுக்கு தட்டுப்பாடு

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அசம்பாவிதங்கள் காரணமாக ஏ-9 பாதை மூடப்பட்டு நான்கு மாதங்கள் முழுமையாக நிறைவுபெற்றுள்ளன.

இந்நிலையில், குடாநாட்டில் எல்லாப் பொருள்களுக்கும் தட்டுப்பாடுதான் நிலவுகின்றது.

அரச அதிபர் மூலம் ஓரளவு அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்கின்ற போதும் ஏனைய பொருள்களுக்குத் தட்டுப்பாடே நிலவுகின்றது.

மூன்றாம் தவணைப் பரீட்சை நிறைவடைந்து 2007ஆம் ஆண்டுக்கான வகுப்பேற்றம் நடைபெறுகின்றது.

அத்துடன், தனியார்கல்வி நிலையங்களிலும் புதிய ஆண்டுக்கான வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் கல்விசார் உபகரணங்களுக்கு குடாநாட்டில் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. குடாநாட்டு மாணவர்களின் 10 வீதமான தேவைகளைக் கூட பூர்த்தி செய்வதற்குரிய காகிதாதிகள் மற்றும் உபகரணங்கள் என்பன இல்லை.

எந்தவொரு கல்விச் சமூகமும் யுத்த சூழ்நிலைகளில் கல்வியைக் கைவிட்டதில்லை.

ஆகவே, மாணவர்களாகிய எங்களுக்குத் தேவையான கல்விசார் உபகரணங்களைக் கப்பல்மூலம் எடுத்துவந்து விநியோகம் செய்வதற்கு அரச அதிபர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நாம் கல்விச் செல்வத்தை இழந்து எதிர்காலத்தைப் பயனற்றதாகச் சீரழிக்கும் நிலைமை நீங்கவேண்டும்.

பல்வேறு சிரமங்களின் மத்தியில் அண்மையில் தான் ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவர்கள் பரீட்சை எழுதினார்கள். எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் உயர்தரப்பரீட்சைக்கு இன்னும் ஒருசில மாதங்களே உள்ளன.

எனவே, மாணவர்களாகிய நாம் சிறப்பாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள கல்விசார் உபகரணங்கள் கிடைக்குமா?

*பருத்தித்துறை.* *சி.ஞானேஸ்வரன் [மாணவன்]*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரான வி.நவரத்தினம் (வயது-97) அவர்களின் இறுதிச் சடங்குகள் கனடாவின் கியூபெக் மாகாணத்தில் உள்ள மொன்றியல் நகரில் நடைபெற்றன. அவரது உடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தபோது எடுக்கப்பட்ட படம் இது. (ஐ-3)

## குடாநாட்டின் உணவு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நாயகமும் அவசர நிவாரணப் பணிகளுக்கான இணைப்பாளருமான ஜான் எகலகன்ட் தெரிவித்திருப்பதாக மேலும் கூறப்பட்டிருக்கிறது.

அமைச்சர் மஹிந்த சமரசிங்கவுக்கு எழுதிய கடிதம் ஒன்றிலேயே, ஐ.நா. உயர் அதிகாரி தமது திருப்தியை வெளியிட்டுள்ளார் என்றும் -

இது விடயமாக ஆராய்வதற்காக இலங்கை வந்த நிலைமை கண்டறியும் ஐ.நா. குழுவுக்கு அரசாங்கம் வழங்கிய ஆதரவுக்கு அவர் நன்றியும் தெரிவித்துள்ளார் என்றும் - தகவல் திணைக்கள அறிக்கையில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

பதவி விலகிச் செல்லும் ஐ.நா. பொதுச் செயலாளர் கோபி அனானுக்கும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நடைபெற்ற கடிதத் தொடர்புகளின் பின்னர் -

குடாநாட்டின் உணவுப் பிரச்சினை, அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் சென்று விநியோகித்தல் சம்பந்தமான விடயங்களைக் கண்டறிவதற்காக ஐ.நாவின் விசேட குழு ஒன்றை ஜான் எகலகன்ட் அனுப்பியிருந்தார்.

குடாநாட்டுக்கு அத்தியாவசியப் பொருள்களைக் கப்பல் மூலம் அனுப்புவது தொடர்பாக ஐ.நா. குழு இனங்கண்டுள்ள சிபாரிசு செய்துள்ள, நிவர்த்தி செய்யவேண்டிய விடயங்களை அரசாங்கம் உடனடியாகக் கவனம் செலுத்தும் என்று அமைச்சர் சமரசிங்க கூறியதாகவும் தகவல் திணைக்கள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக் கிறது.

அதன் பிரகாரம் - குடாநாட்டுக்கு ஒரு மாதத்துக்கு தேவையான அவசர தேவைக்கான மேலதிக கையிருப்பை வைத்திருப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

ஐ.நா. அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பல சிபார்சுகளை கவனத்தில் எடுத்து, மேற்கொள்ளப்படவேண்டிய பணிகள் தொடர்பாக ஆராய்வதற்காக, உயர் அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று விரைவில் யாழ்ப்பாணம் செல்லும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். நோர்வேயைச் சேர்ந்தவரான ஜான் எகலகன்டின் சிபார்சுகளுக்கு நன்றி தெரிவித்து அமைச்சர் சமரசிங்க உடனடியாகவே பதிலளித்துள்ளார் என்றும் தகவல் திணைக்களம் பிரஸ்தாபித்துள்ளது. (அ-1)

## ஜோர்தான் கப்பலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பலை மீட்பது தொடர்பாக நோர்வே அனுசரணையாளர்கள், விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டிருக்கின்றனர் என்பதை புலிகளின் ஊடக ஒருங்கிணைப்பாளர் தயா மாஸ்டர் உறுதிப்படுத்தினார்.

இந்தியாவிலிருந்து 14 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை ஏற்றிக் கொண்டு தென்னாபிரிக்கா செல்லும் வழியில் இந்தக் கப்பலில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டது. அதிலிருந்த 25 மாலுமிகளையும், கப்பலையும் விடுதலைப் புலிகள் தங்கள் கட்டுப்பாட்டுப் பகுதிக்குக் கொண்டுசென்றனர். அதன் பிறகு மாலுமிகள் 25 பேரையும் புலிகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைத்திருந்தனர்.

எகிப்து மற்றும் ஜோர்தான் நாடுகளைச் சேர்ந்த இந்த மாலுமிகள் பாதுகாப்பாகக் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டனர். இவர்கள் பயணம் செய்த கப்பல் இன்னமும் விடுதலைப் புலிகளின் பிடியில் உள்ளது.

முல்லைத்தீவுக் கடற்கரையோரத்தில் நங்கூரமிட்டு நிற்கும் கப்பலைத் திருத்துவதற்காகக் கொழும்பு துறைமுகத்துக்குக் கொண்டுசெல்ல வேண்டியிருக்கும். கப்பலை விடுவிப்பதற்கு விடுதலைப் புலிகளின் இணக்கத்தைப் பெறவேண்டியுள்ளது. இதற்காகவே நோர்வே அனுசரணையாளர்கள், விடுதலைப் புலிகளோடு தொடர்பு கொண்டிருக்கின்றனர்.

கடற்படையினரின் கடற்கலங்களின் உதவியுடனேயே கப்பலை நடுக் கடலுக்குக் கொண்டு சென்று பின்னர் கொழும்பு துறைமுகத்துக்கு இழுத்துச் செல்ல வேண்டியிருக்கும் என்று கூறப்படுகிறது. இது விடயத்தில் புலிகளின் இணக்கத்தைப் பெற முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிகின்றது. (ஐ)

## வவுனியா பூங்கா வீதியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் மின்கம்பங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த காணியில் மின் கம்பங்களிடையே மறைத்து வைக்கப்பட்டிருந்த கிளைமோர் குண்டே வெடிக்க வைக்கப்பட்டுள்ளது எனக் கூறப் படுகிறது.

இதன்போது பொலிஸ் உத்தியோகத்தர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார். உடனடியாக விசேட அதிரடிப்படையினர் சடலத்தை அகற்றி வவுனியா பொது மருத்துவ மனையில் ஒப்படைத்தனர்.

விசேட அதிரடிப்படையின் முகாமில் இருந்து 150 மீற்றர் தொலைவில் இந்தக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது வவுனியாவில் பாதுகாப்பு ஏற்பாடு களைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

பொலிஸார் சோதனை நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ள வேண்டும் என்று சம்பவ இடத்துக்கு விஜயம் செய்து விசாரணை நடத்திய வுனியா மாவட்ட நீதிவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உத்தரவிட்டார்.

இதேவேளை -

வவுனியா நெளுக்குளம் - செட்டிக் குளம் வீதியில் கலைமகள் பாடசாலைக்கு முன்பாக இனம்தெரியாத நபர்களினால் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருப்பதாக வவுனியா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொல்லப்பட்ட நபர் மோட்டார் சைக் கிளில் சென்றுகொண்டு இருந்த போது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள் ளப்பட்டுள்ளது. கொல்லப்பட்டவர் அடையாளம் காணப்படவில்லை. (ஐ)

## பிரணாப் முகர்ஜி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகபூர்வ அழைப்பிதழை வழங்குவதற்காகவே அவர் கொழும்பு வரவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால், இந்தப் பயணத்தின்போது அமைதி முயற்சிகளின் தற்போதைய நிலைமையும், வடக்கு - கிழக்கில் ஏற்பட்டுள்ள மனித அவலங்களும் விவாதிக்கப்படும் எனவும் கூறப்படுகின்றது.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் சிறப்புச் செய்தியும் இந்தச் சந்திப்பின் போது மஹிந்தவிடம் கையளிக்கப்படும் எனவும் தெரிவிக் கப்படுகின்றது.

இந்தியப் பிரதமரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அண்மையில் சந்தித்த போது தமிழ் மக்கள் படும் மனித அவலங்களைத் தடுப் பதற்கு உறுதியான நடவடிக்கைகளைத் தான் மேற்கொள்வதாக இந்தியப் பிரதமர் உறுதியளித்ததும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் சேவைக்கெனத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு இந்தளவு மிகப் பெரியளவு சம்பள உயர்வு வழங்கப்படவிருப்பதற்கு அரசாங்கத்துறை ஊழியர்கள் சங்கப் பிரதிநிதிகள் கடும் ஆட்சேபமும் கண்டனமும் தெரிவித்துள்ளனர். (அ)

(மற்றொரு செய்தி 7ஆம் பக்கத்தில்)

## திருமலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர் ஒருவரின் சடலத்தை உப்புவெளிப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இச்சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் -

அடையாளம் காணும்பொருட்டு திருகோணமலை வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும் - உப்புவெளிப் பொலிஸார் தெரிவித்தனர். (12)

## இந்திய மத்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த மாதம் 5ஆம் திகதி கைச்சாத்திடப்படவுள்ளது.

இந்திய மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சரின் செயலாளர் ஆர்.வி. சப்றியும், இலங்கை மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சர் ஜோன் செனவிரட்னவும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளனர்.

இந்நிகழ்வில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத்தும் பங்குபற்றுவார் என்று தெரிவிக் கப்படுகின்றது.

500 மில்லியன் அமெரிக்க டொலர் (50,000 மில்லியன் ரூபாய் கள்) செலவில் நிர்மாணிக்கப்படும் இந்த மின் நிலைய வேலைகள் 2010 ஆம் ஆண்டு நிறைவு பெறும்.

முதலில் 500 மெகாவோற் சக்தியை உற்பத்தி செய்யும் இந்த நிலையம் பின்னர் 1,000 மெகாவோற் சக்தியை உற்பத்தி செய்யக் கூடியதாக உயர்த்தப்படும் எனவும் கூறப்படுகின்றது. (ஐ)

(மற்றொரு செய்தி 7ஆம் பக்கத்தில்)


**அபிவிருத்தி அதிர்ஷ்டம்**
உத்தியோகபூர்வ முடிவுகள்

843 நீலம்

வெற்றி இலக்கங்கள்

விருச்சிகம் 01 07 10 35

26-12-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 4740813 - 4754554

ஜக்பொட் பரிசு ரூபா.8,596,050/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 299,296 | 10/- | 2,992,960/- |
| 2 இலக்கங்கள் | 27,464 | 20/- | 549,280/- |
| 1 இல. + லக்கினம் | 27,158 | 30/- | 814,740/- |
| 2 இல. + லக்கினம் | 2,512 | 100/- | 251,200/- |
| 3 இலக்கங்கள் | 748 | 500/- | 374,000/- |
| 3 இல. + லக்கினம் | 59 | 5,000/- | 295,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 8,596,050/- | - |
| மொத்தம் | | | 5,677,180/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 357,246 | | 6,700,680/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 8,930,200/-

தொடர் இல. 5628022 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2006 டிசம்பர் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, செனட் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| பதுளை | 4752982-0-05 |
| மாத்தளை | 4749113-3-07 |
| கம்பஹா | 4747041-4-62 |
| கொழும்பு | 4744235-6-01 |
| மொனராகலை | 4749677-4-39 |


## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை

(இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்)

நீர்வேலிமத்தி, நீர்வேலியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை நேற்று (27.12.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கம்மாவின் கணவரும் அருந்தவநாதனின் தந்தையும் சரோஜினிதேவியின் மாமனும் இசையரசி, திருமகள், புவனேசன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2006) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*நீர்வேலிமத்தி,*
*நீர்வேலி.*

தகவல்:
த.நடராஜா.

### கலாபூசணம் வல்லிபுரம் கந்தையா (மணியம் மாஸ்ரர்)

[ஓய்வு பெற்ற ஆசிரியர், யா/கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம், போதனாசிரியர், யா/கோக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி]

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கந்தையா நேற்று (27.12.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

40/1, கலைமகள் வீதி,
அரியாலை.

தகவல்:
க.தவராஜா (மகன்).


**BRIGHTMAN**
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.
புதிய பிரிவு
சரளமாக பேச, எழுத, வாசிக்க சிங்களம்
By: லீலாகிருஷ்ணன்
ஆரம்பம்: 31.12.2006 Sun 3.30
(அனுமதிகளை முன்கூட்டியே பதியவும்)

**CHEMISTRY**
A/L 2009
அறிமுக வகுப்பு
29.12.2006 (வெள்ளி) 3 p.m ஆரம்பம்.
S.VASU
NAVALAR
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**C.C.A**
சுன்னாகம்
நாடகமும் அரங்கியலும்
கனேஸ்
B.A (Hons)
Drama Special
ஆரம்பம் : 30.12.2006
2007 - வியாவிளை 2.p.m
2008 - பிரிவு II 3 p.m

**A/L 2009**
யாழ்.நகரில் கற்பித்தலில் போதியளவு அனுபவமும் திறமையும் அர்ப்பணிப்பும் நிறைந்த ஆசிரியர்களின் வழிநடத்தலில்....
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான
பிரிவுகள் ஆரம்பம்.
06.01.2007 சனி, காலை 8 மணி.
அனுமதிகளை இன்று முதல் பெற்றுக் கொள்ளவும்.
நாவலர் இன்ஸ்ரிரியூட்
தலைமை நிறுவனம்: ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.
கிளை நிறுவனம்: பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி.

**DIGITAL CAMERA தேவை**
SLR MODEL DIGITAL CAMERA விற்பனைக்கு இருப்பின் தொலை பேசி இலக்கம் 0714220025 க்கு தொடர்பு கொள்ளவும்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.12.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org